உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி ௨௪] அக்ஷய௵ ஆடி௴ [பகுதி ௯.

Vol. XXIV. July-August-1926. No. 9.


## *திருவள்ளுவர்.

சங்கப்புலவர்சரிதங்களுள் ஒன்றுமே சரியாகத் தெரிந்தபாடில்லை. நீண்டஇடைக்கால இருளால் விழுங்கப்பட்ட இலக்கியங்கள் பலவாக வேண்டும். சிதிலமான பழைய சுவடிகளைத் தேடியெடுத்துச் சென்ற சிலவருடங்களாக அச்சியற்றிவெளிப்படுத்திவரும் சில பேருபகாரிகளின் அரியமுயற்சியாற் கிடைத்துள்ள சில சங்க இலக்கியங்கள் தவிரப் பண்டைத் தமிழகச்செய்திதெரிவிக்கும் வேறுசாதனங்கள் கிடையா. கிடைக்கும் சில சங்கநூல்களிலும் சங்கப்புலவர்சரிதம்பற்றிய குறிப்புக்கள் காண்பது அரிது. இந்நிலையில், திருவள்ளுவரைப்பற்றிய சரிதக் குறிப்புக்களைத் தெளிந்து துணிதல் எளிதன்று. எனினும், சங்கநூல்களிலும் பழம்பாட்டுக்களிலும் கிடைக்கும் சில குறிப்புக்கள் வள்ளுவர் சரிதமுழுதையும் திரட்டித்தராவேனும், தற்காலத் தமிழுலகில் வழங்கிவரும் அவர்கதையின் உண்மையை ஆராய்வதற்கு ஒருவாறு உதவுகின்றன. அவையிற்றை உற்றுநோக்குங்கால், பிரஸ்தாபக்கதைகளில் நம்பிக்கை நலிவடையக் காண்போம்.

---

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை பாலியகிறிஸ்தவசங்கம் என்பவற்றி னாதரவில், நாளிது 1926௵ ஜனவரி௴ 25௳ மதுரை யூனியன் கிறிஸ்தவகலாசாலையில் ரேவரண்டு H. A. பாப்புலிதுரையவர்கள் தலைமை வகித்த பெருங்கழகத்தில், மதுரை உயர்தரநீதிமன்றத்து நியாயவாதசதுரர் திருவாளர் சோமசுந்தரபாரதியார் M.A., B.L., அவர்கள் செய்த உபந்யாசத்தின் விரி.

வள்ளுவரின் காலம், ஊர், குடிப்பிறப்பு, சமயம் முதலியவற்றைப் பலரும் பலபடியாகப் பேசிவருகின்றனர். இவைபற்றிய தற்காலப் பிரஸ்தாபங்களுக்கு உள்ள ஆதாரவுகளைச் சிறிது விசாரிப்போம்.

கடைச்சங்கத்தின் கடைக்காலத்திற் சங்கப்புலவர் இறுமாப்பை யடக்கின அவதாரபுருடர் வள்ளுவர் என்பார் பலர். இறவாப்புகழுடைய தம் குறணூலைக் கடைச்சங்கத்தில் அரங்கேற்றவந்த வள்ளுவரைப் புறக்கணித்து, அவர்தம் அரியநூலையும் அவமதித்த சங்கத்தாரை வள்ளுவர் தம் தெய்விகத்தன்மையாற் பொற்றாமரைக்குளத்தில் வீழ்த்தி அலமரச்செய்ததாயும், புலவர்கள் வள்ளுவரையும் அவர் தம் குறணூலையும் புனைந்துபாடித் தம்முயிரை இரந்துபெற்றதாயும், குறட்புகழின் பிறப்பே சங்கப்புகழின் இறப்பாகமுடிந்ததென்றும் கதைப்பார்பலர் கதைக்கின்றனர். சிலதலைமுறையாகப் புலைமைரத்தக்கலப்புடைய பார்ப்பான் ஒருவனுக்கும் தெளியாப்பிறப்பும் புலைக்குடிவளர்ப்பும்பெற்ற கீழ்மகள் ஒருத்திக்கும் பிறந்த சிறுர் எழுவருள், கடைமகவே வள்ளுவரென்றும், குறிசொல்லுபவரும் பறையருக்குப் புரோஹிதருமான வள்ளுவவகுப்பினரால் வளர்க்கப்பெற்றமையின் வள்ளுவரென்பது இவருக்குக் காரணப்பெயராயிற்றென்றும், இவர் மயிலாப்பூர் வணிகனான ஏலேலசிங்கனால் வறுமைவருத்தங்கள் நீக்கப்பெற்று வாசுகியென்னும் வேளாண்மகளை மணந்துவாழ்ந்து மதுரைச்சங்கவீறழித்துப் பேறு பெற்றாரென்றும் தற்காலக் கதைகள் கேட்கின்றோம். இவற்றுள் ஒன்றுக்கேனும் பழநூலாதாரவு இருப்பதாகத் தெரியவில்லை. கிடைக்கும் சில பண்டைக் குறிப்புக்களும் இக்கதைகளின் பொய்ம்மைகுறிக்கக் காண்கின்றோம்.

முதலில் வள்ளுவர் மூன்றாஞ்சங்கத்தை முற்றுவித்தவரலாற்றின் உண்மையைச் சிறிது துருவியாராய்வோம். குறட்சுவடிகளிற் காணப்படும் திருவள்ளுவமாலை எனும் புனைந்துரைப்பாட்டுக்களை அடிப்படையாகக்கொண்டு இக்கதை நடக்கின்றது. வள்ளுவமாலை உள்ளபடி கடைச்சங்கப்புலவராற் பாடப்பட்டது தானா? என்ற வினா நிற்க; அப்புலவர்பாக்களே வள்ளுவமாலையெனக்கொள்ளினும், அவைகளிற் சங்கப்புலவர் வள்ளுவரை அவமதித்து அவரால் வீறடக்கப்பட்டதற்கேனும், அவர்தம் இறவாக்குறணூல் அப்புலவர்முன் அரங்கேற்றப் பட்டதற்கேனும் ஆன்ற சான்று ஏதும் சுட்டப்படக்காணோம். கடைச்

சங்கப்புலவராற் பாராட்டிச் சேமித்துவைக்கப்பட்ட நூற்றிரட்டுக்களுள் அப்புலவர்சிலர் புனைந்துரைத்த பாக்கள் காணப்படுகின்றன. கடைச் சங்கத்தார் நூற்றிரட்டுக்களில் திருக்குறளும் ஒன்றென்பது தமிழர் யாவருக்கும் ஒப்பமுடிவதாகும். அத்திரட்டு நூல்களுள்ளும் வள்ளுவர் நூல் தலைசிறந்ததென்பதற்கு இடைநெடுங்காலம் பிற பலநூலும் வழக்கிழந்தொழியவும், என்றும் பிரபலநூலாகக் குறள் நின்று நிலவியதே போதிய சான்றாம். நாம் அறிந்த சங்கத்திரட்டு நூல்களாவன: பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் பதினெண்கீழ்க்கணக்கு முதலியனவும் ஆம். இவையனைத்தும் கடைச்சங்கப்புலவரியற்றியனவும், அவர்க்கு முற்பட்டபுலவர்பாக்களிற் சேமித்துவைக்கத்தக்க சிறப்புடையனவாகக் கடைச்சங்கத்தாரும் பிறரும் கண்டு திரட்டியனவுமாக முடியும். இத் திரட்டுநூல்களுள், தகவுமிகவுடைய திருக்குறளின்பெருமைநோக்கிச் சங்கப்புலவரனைவரும் இதனைப் புனைந்துபாடியிருக்கலாம். அன்றி, வேறுசிலநூல்களுக்கும் இவ்வாறே அவரனைவரும் சிறப்புக்கவிகள் தந்திருப்பின் அந்நூல்கள் வழக்கிழந்தகாலத்தே சிறப்புப்பாயிரச்செய் யுட்கள் இறப்பின்வாய்ப்பட்டும் இருக்கலாம். குன்றாவழக்குடைக்குற ளொடு அதன் புகழ்மாலைப்பாக்களும் நின்றுநிலவிவந்திருக்கலாம். இத னுண்மை எப்படியாயினும், திருவள்ளுவமாலையில் வள்ளுவர் கடைச் சங்கத்தின் கடைக்காலத்திற் சங்கத்தை வீறழித்தகதை சுட்டுங் குறிப்பு ஒன்றேனும் இல்லை.

கடைச்சங்கக் கடைநாளிற் றோன்றித் தம் குறனூல் அரங்கேற் றுதலினிடையே வள்ளுவர் மதுரைச்சங்கத்தை அழித்த கதை மெய்யா மேல், புலவர் சங்கமிருந்து இயற்றிய பழம்பனுவல்களிற் குறளடிகள் குறிக்கப்படக் காரணமில்லை. மூன்றுஞ்சங்கப்புலவர் நூல்களிலும் சுட்டப்படக்கூடாத பின்வந்த திருக்குற ளருந்தொடர்கள் அச்சங் கத்தாருக்குப் பலநூற்றாண்டுகளுக்குமுன் எழுந்து அவராற் பாராட்டிச் சேமித்துப் பாதுகாக்கப்பட்ட பழந்தொகைப்பனுவல்களிற் சுட்டப்படு மாறில்லையென்பது ஒருதலை. ஆனால் மதுரைச்சங்கச் சதுரர் நூல்கள் பலவற்றுள்ளும், அவர்போற்றுதற்கான அவருக்குமுற்பட்ட மிகப் பழைய தமிழ்த்திரட்டுநூல்களுள்ளும் வள்ளுவரும் அவரதநூலும் பலவேறிடங்களிலும் பாராட்டப்பட நாம் காணுங்கால், வள்ளுவரைப் பாராட்டி யெடுத்தாளும் பாவலருக்கு ஒன்று அவர் சமகாலத்தவராதல்

வேண்டும்; அன்றேல் முன்னோராதல்வேண்டுவதன்றிக் காலத்தாற் பிந்தியவராகக்கருதற் கிடமில்லை. தமக்குமுற்பட்ட இடைச்சங்கச்செய்யுளும் பிறவுஞ் சேர்த்துக் கடைச்சங்கத்தார் திரட்டிய புறநானூறுமுதலிய பழையநூல்களிலும் குறளை மதிப்புடன் எடுத்தாளக்காண்கின்றோம். குறளடிகள் இவ்வாறு கடைச்சங்கப்புலவராலும் அவர்க்குமுற்பட்டபுலவராலும் எடுத்தாளப்பட்டது மட்டுமில்லை; குறள்வாக்கியங்கள் அறத்தெய்வக்கூற்றாயும் வள்ளுவர் மெய்த்தெய்வப்புலவராயும் அவர்பலராலும் வாயாரவாழ்த்தப்படவும் காணும் நாம், வள்ளுவர் அவர்க்குச் சமகாலத்தவரென்று கொள்ளுதலினும் அவர்க்கு முற்பட்டவராகக் கருதலே சால்புடைத்தாம். புலவரெவரும் தம் காலத்தவரால் தலைநின்ற தேவநாவலராய் மதிக்கப்படும் வழக்கம் இல்லை. பெரும்பாலும் சமகாலத்தவரவமதிப்பும் தாமியற்றியநூலின் மெய்ப்பெருமைவலியாற் பிற்காலத்தவரால் மேம்பாடும் அடைவதே புலவருலகியல்பு. தெய்வப் பாவலராக வள்ளுவரைப் பழஞ் சங்கப்புலவர்கள் கூறுவதால் அவர் தமக்கு வள்ளுவர் நீண்டகாலத்துக்கு முற்பட்டவராகவும், அவரறநூலின் இறவாச்சிறப்பு அங்கீகரிக்கப்படுதற்குப் போதிய அவகாசம் அக்குறளுக்கும் அதனடிகளைப் பாராட்டி எடுத்தாளும் சங்கப்பனுவல்களுக்கும் இடையே ஏற்பட்டிருக்கவும் வேண்டும். இது சம்பந்தமாய்த் திருக்குறளடிகளைச்சிந்திக்கச்செய்யும் சில சங்கச்செய்யுட்டொடர்களை ஈண்டுக் குறிப்போம்:—

> " தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
> தன்னெஞ்சே தன்னைச் சுடும் "–(293)

என்னுங் குறளோடு,—

> " நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினு மறையர்வா
> நெஞ்சத்திற் குறுகிய கரியில்லை யாகலின் "– (செய்-8)

என்ற நெய்தற்கலிச்செய்யுட்டொடரின் நெருக்கமும் இயைபும் சிந்திக்கத் தக்கது.

> " கோட்டுப்பூப் போல மலர்ந்துபிற் கூம்பாது
> வேட்டதே வேட்டதா நட்பாட்சி—தோட்ட
> கயப்பூப்போன் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
> நயப்பாரு நட்பாரு மில்"— (நட்பாராய்தல்-5)

என்னும் நாலடிச்செய்யுள்,

" உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு "— (425)

என்னுங் குறள்விளக்கமென்பது கூறுதே போதரும்.

" இலலாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல் "— (905)

என்ற தேவர்குறளுக்கும்,—

" இல்லாளை யஞ்சி விருந்தின்முகங் கொன்றநெஞ்சிற்
புல்லாள னுக "— (மண்மகளிலம்பகம் செய்-217)

என்ற தேவர்சிந்தாமணிக்கும் உள்ள இயைபு வெளிப்படை.

" பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர் "— (508)

என்னுங் குறளை,—

" முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிநா கரிகர் "— (355)

என்னும் நற்றிணைச் செய்யுளடி நினைவூட்டுகின்றது.

" தோழிநாம், காணுமை யுண்ட கடுங்கள்ளை மெய்கூர
நாணுது சென்று நடுங்க வுரைத்தாங்குக்
கரந்ததூஉங் கையொடு கோட்பட்டாங் கண்டாய் "

என்னும் முல்லைக்கலியின் (செய்-15) அடிகள்,—

" களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும் "— (928)

" காமம்-மறைபிறந்து மன்று படும் "— (1138)

என்னுங் குறளிணைகளின் பிணையலாகும்.

" பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர் "— (528)

என்னுங் குறளைக்குறிக்கும்,—

" வரிசை யறிதலோ வரிதே பெரிதும்
ஈத லெளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே "— (121)

என்னும் புறப்பாட்டடிகள் கருதத்தகும்.

" பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும் "— (349)

" ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும் "— (370)

என்னுங் குறட்கருத்துக்களை,—

" அற்றது பற்றெனி லுற்றது வீடு "— (1-2-5)

" ........இன்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால்
அன்றே யப்போதேவீடும் அதுவே வீடு வீடாமே "—(8-8-6

என்னுந் திருவாய்மொழிப்பாசுரங்கள் வற்புறுத்தக் காண்கின்றோம்.

" அங்கணத்து ளுக்க வமிழ்தற்று "—(720)

என்னுங் குறளடிக்கும்,—

" ஊற்றைக் குழியி லமுதுகுத்தாங்கு "—

என்னும் பெரியாழ்வார்திருமொழிக்குமுள்ள இயைபு நோக்கத்தக்கது.

" தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை "— (55)

என்னுங் குறளை,—

" தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்"-(காதை-22 வரி-59-61)

என்று சாத்தனார் மணிமேகலையுள் எடுத்தாண்டுள்ளார். இதுபோலவே,-

"நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம் பாடிற்றே யாயிழை கணவ" — (34)

என்னும் புறப்பாட்டடிகளில்,—

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" — (110)

என்னுங் குறள் ஆட்சிபெறுகின்றது.

இன்னும் இத்தகைய மேற்கோள்வாக்கியங்கள் பல எடுத்துக் காட்டலாமாயினும் ஈண்டு இவை போதியவாம். இவ்வாறு உரையொடு பொருளும் உறழும் பலவிடங்களையும் காட்டுமிடத்துக் குறளாசிரியரே அவற்றைப் பிறநூல்களினின்றும் இரவல்கொண்டிருக்கலாகாதோ எனின், இவ்வாக்கியங்களின் பொருளொக்கும் நடைப்போக்கும் உற்று நோக்குவார்க்குக் குறளே பிறநூலுடையாருக்கு மேற்கோளாதல் வெள்ளிடைமலையாம். அன்றியும், சாத்தனார் மணிமேகலையிற் 'பொய்யில் புலவன்பொருளுரை'யெனவும், ஆதனார்கிழார் புறப்பாட்டில் 'அறம் பாடிற்றே'எனவும் முறையே குறளைப் பாராட்டிப்பாடக்கண்டுவைத்தும், குறளாசிரியர் பிறநூலினின்று இரவல்கொண்டாரெனக்கூறுதல் சிறிதும் பொருந்தாக்கூற்றாம். எனவே சங்கப்புலவர்பலராலும் எடுத்தாளப்படும் குறள் அவர் தமக்குக் காலத்தான் முந்தியதாதல் ஒருதலை. அன்றியும், கடைச்சங்கப்புலவரான சாத்தனார் 'பொய்யில்புலவன்பொருளுரை'யெனவும் ஆதனார்கிழார் 'அறம்பாடிற்றே' எனவும் குறளையும் அதனாசிரியரையும் போற்றிப் பேணக் காணும்நாம், இப்பழம்புலவராற் குறள் மெய்ம்மறையெனவும், அதனாசிரியர் பொய்யா அறக்கடவுளெனவும் பாராட்டப்படுதற்கு வள்ளுவரின் மெய்ப்பெருமை அப்புலவருக்கு வெகுநீண்டகாலத்துக்கு முன்னே நிலைபெறலடைந்திருக்கவேண்டுமென்பதை எளிதிற் றெளியலாகும். நமக்குக் கிடைக்கும் சங்கநூல்களெல்லாம் கடைச்சங்கப்புலவராலேயே இயற்றப்பட்டன எனக் கொள்ளற்கும் இல்லை. சில புறப்-

பாட்டுக்களும் கலிகளும் இடைச்சங்கப்புலவராலேனும் எனைத்தானும் கடைச்சங்கத்துக்கு முற்பட்டபுலவராலேனும் ஆக்கப்பட்டிருக்கவேண்டு மென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அவர்நூல்களிலும் குறள் எடுத்தாளப்படுதலால் வள்ளுவர் கடைச்சங்கக்கடைக்காலத்தவருமில்லை; முதலிடைக்காலத்தவருமில்லை; அச்சங்கத்துக்கு நெடும்பல்லாண்டுகட்கு முன்பிருந்தவராவரென்பது இனிது போதரும்.

தொல்காப்பியம் முதற்சங்கக்காலத்து ஆக்கப்பெற்று இடைச்சங்கத் தாருக்கு இலக்கணமாயிற்றென்பது தமிழரெல்லார்க்கும் ஒப்பமுடிந்த தொன்று. கடைச்சங்கக்காலத்தினும் தொல்காப்பியம் ஆட்சியிலிருந்த தாயினும், அதன்விதிகளுக்கு மாறுபட்டவழக்குக்கள் அச்சங்கநூல்க ளிற் பயிலக்காண்கின்றோம். உதாரணமாக: மொழிக்குமுதலாகாதென்று தொல்காப்பியம் விதந்துவிலக்கிய சகரத்தை முதலாகக்கொண்ட தமிழ் மொழிகள்பல கடைச்சங்க இலக்கியங்களிற் பயிலக்காண்கின்றோம். வள்ளுவர்நூலில் வடசொல்லாய்வந்து வழங்கும் இரண்டொன்று தவிரத் தனித்தமிழ்ச்சகரமுதன்மொழிகள் காணல் அரிது. இதனால், தொல் காப்பியவிதிகள்சில பிறழ்ந்துவழங்கப்பெற்ற கடைச்சங்கக்காலத்துக்கு முன் குறள் எழுந்திருக்கவேண்டுமென்று ஊகிப்பதும் இழுக்காது.

சாணக்கியும் முதலிய ஆரியநீதிநூல்களினின்று அறங்களைத் திரட்டி வள்ளுவர் நூல்செய்திருக்கவேண்டுமென்றும், ஆதலால், சாணக் கியர் முதலியோருக்கு வள்ளுவர் பிற்காலத்தவராயிருக்கவேண்டுமென் றும் சிலர் கூறுகின்றனர். இதற்குப் பரிமேலழகர் 662-ம் குறளின் விசேடக்குறிப்பில் "வியாழ வெள்ளிகளது துணிபுதொகுத்துப் பின் நீதிநூலுடையார்கூறியவாறு கூறுகின்றமையின்" என்று எழுதியுள்ள வாக்கியத்தை ஆதாரமாக்கி, அவ்வாக்கியத்திற்கண்ட 'பின் நீதிநூ லுடையார்' என்ற சொற்றொடர் சாணக்கியர்முதலாயினரைச் சுட்டுவ தாகக் கொள்கின்றனர். இதுவே பரிமேலழகர்கருத்தாயின் அவர் விசத

மாக்கியிருப்பர்? அன்றியும், பின் னீதிநூலுடையார் யாரேயாயினும் அவர்தம் வழிநூல்களுக்குக் குறள் சார்பு நூலாகும் என்னுங்கருத்தைப் பரிமேலழகர் இவ்வாக்கியத்தாற் குறித்ததாக ஏற்படுமாறில்லை. ஆழச் சிந்தித்தால் வியாழ வெள்ளிகளின் நீதிநூல்களுங்கூடக் குறளுக்கு முதனூலெனப் பரிமேலழகர் இவ்வாக்கியத்திற் சுட்டிலரென்பது தெற்றென விளங்கும். வியாழ வெள்ளிகளின் துணிபுகளைத்தொகுத்த ஆரியநீதிவழிநூலுடையார்முறைக்கும் குறளாசிரியர் அறம்வகுத்த முறைக்கும், எடுத்துக்கொண்ட குறட்பொருள்பற்றியுள்ள ஒப்புமை கூறியதன்றி ஈண்டுப் பரிமேலழகர் காலமுறையால் முதல்வழிசார்பு நூல்களாமாறு வகுத்துக்கூறவந்தாரில்லை. இவ்வாறே பிற இடங்களிலும் குறட்கருத்துக்களோடு வடநூலுடையார் கொள்கைகளின் ஒப்பும் மாறுபாடும் பரிமேலழகர் எடுத்துக்காட்டிச்செல்லுதலும் கவனிக்கத் தக்கது.

சங்கத்தார் பாடியதாகக்கொள்ளப்படும் திருவள்ளுவமாலைச் செய்யுட்கள்பல குறளை ஆரியமறைகளுக்கு ஒப்பதும் மிக்கதுமாமென்று விசதமாகப் பாராட்டுகின்றன. வேதங்களுக்கு மிகப்பிந்திய மனுவாதி வடமொழிநூலொன்றுமே குறளுக்கு முதனூலாகாதெனுங்குறிப்பும் திருவள்ளுவமாலைச்செய்யுட்களிற் காணலாம். இவ்வாறு மனுவாதி வடமொழி அறநூலுடையாரே வள்ளுவருக்கு முதனூலுடையாராகாத போது, அவரைப் பின்பற்றிய மிகப்பிற்பட்ட கேவலம் நீதிநூலுடைய சாணக்கியாதியர் வள்ளுவருக்கு வழிகாட்டிகளாவது எப்படியோ?

மேலும், நீதி அறத்தின் ஒருகூறேயாமாகலின், அறநூல்களினின்று நீதிநூல்களைப் பிரித்துத் தொகுக்கலாவதன்றிக் கேவலம் நீதிநூல்களினின்று அறநூல்கள் இயற்றப்படுமாறில்லை. பரிமேலழகரே பலவிடத்தும் நீதிநூலின் வேறாய அறநூல்களுண்மையைச் சுட்டியுள்ளார். திருக்குறள் அறநூலாகவே, அறத்தின் ஒருபகுதியான நீதிகளை

மட்டுங்கூறும் வடமொழிநூல்களின்வழிநூலாக வள்ளுவர் குறளை இயற்றினர் என்பது பொருந்தாக்கூற்ரும்.

இன்னும், ஆரிய தருமசாத்திரமுறை வேறு, தமிழறநூன்மரபு வேருகும். திருக்குறள், தமிழ்மரபுவழுவாது பொருளின்பகுதிகளான அகப்புறத்துறைபறங்களை மக்கள்வாழ்க்கைமுறைக்காமாறு ஆராய்ந்து அறுதியிட்டு வடித்தெடுத்துவிளக்கும் தமிழ்நூல். தமிழ்மரபும் ஆரியர் சம்பிரதாயமும் அறிந்த பரிமேலழகர் தம் குறளுரையில் ஆங்காங்கே இவ்விருபெருவழக்குக்களின் இயைபும் முரணும் எடுத்துக்காட்டிச் செல்லுமழகு பாராட்டத்தக்கது. இதைவிட்டுத் திருக்குறள், சாணக்கிய ராதி வடமொழிநீதி வழிநூல்களுக்குப்பின் அவற்றின் சார்புநூலாக எழுந்ததென்பார் தமது ஆரியமதிப்பும் காதலும் வெளிப்படுத்துவ தன்றிச் சரிதவுண்மை துலக்குபவராகார். தமிழிற் பெருமையுடைய அனைத்தும் ஆரியநூல்களினின்று திரட்டப்பட்டிருப்பதாகக்காட்டி மகிழ்வார்சிலர்க்கன்றி, நடுநிலையாளருக்கு வள்ளுவர்குறள் தமிழில் தனி முதலறநூலேயாகுமென்பது வெள்ளிடைமலையாம்.

(தொடரும்.)

---

## பிழையும் திருத்தமும்.

---

செந்தமிழில் இவ்விருபத்துநான்காந்தொகுதியின் ஏழாம்பகுதி யில் வந்த முதற்பராந்தகன் என்ற உரைநடையின் தலைப்பிற் காணப்படும் சாலிவாகனசகம் 985—1026 என்பதை 829—870 என்றும், எட்டாம்பகுதி ௩௩டும் பக்கம் கஅ-ம் வரியில் பண்டத என் றிருப்பதைப் பண்டித என்றும் திருத்திக்கொள்ளவேண்டும்,

---

௨

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[ந௦ச-ம் பக்கத்தொடர்ச்சி.]

287. தையல்தன் கற்பும் தன் தகவும் தம்பியும்
மையறு கருணையும் உணர்வும் வாய்மையும்
செய்யதன் வில்லுமே சேம மாகக்கொண்
டையனும் ஏகினன் அல்லின் நாப்பணே.

இ - ள். சானகியின்கற்பும் தனது சால்பு இரக்கம் அறிவு மெய்ம்மை ஆகியவைகளும் தன் சிகவில்லும் தம்பியும் காவலாக, இராமன், நடு ராத்திரியிலே செல்வானாயினன்.

"உருவப்பொருளாகிய இளையபெருமாளும் வில்லும் தனக்குப் புறக்காவலாகநிற்றல்போல, அருவப்பொருளாகிய கற்பும் நடுநிலையும் சீவகருணையும் மெய்யுணர்ச்சியும் சத்தியமும் அகக்காவலாக நிற்றலாற் சேமமாகக்கொண்டு என்றார்."

288. பொய்வினைக் குதவும் வாழ்க்கை அரக்கரைப் பொருந்தி, அன்னார்
செய்வினைக் குதவும் நட்பால், செல்பவர்த் தடுத்தல் ஏய்க்கும்
மைவிளக் கீதே என்ன வயங்கிருள் துரக்க, வானம்
கைவிளக் கெடுத்த தென்ன, வந்தது கடவுட் டிங்கள்.

இ - ள். (மெய்க்குச் சார்பான தர்ம காரியங்களுக்குப் பயன் படாமல்) பொய்க் (குச் சார்பான அதர்ம) காரியங்களுக்குப் பயன்படுகின்ற வாழ்க்கையையுடைய இராக்கதரை (த் துணையாக)ச் சேர்ந்து, அவர் செய்யும் (தீய) காரியங்களுக்கு உதவிசெய்கின்ற உறவுடைமையினால், (அவ் இராக்கதரை அழிக்கச்) செல்பவர் (ஆகிய இராம லக்குமணர் களை (வழி தெளிவாகத் தெரிந்துசெல்லாதபடி) தடைசெய்வது போன்ற இருளை ஓட்ட, வானம் (ஆகிய மாது) கைவிளக்கேந்தியது போலச் சந்திரன் உதயமானது.

வினை - காரியம் (சங்க அகராதி). நட்பு - உறவு (ஷை). மைவிளக்கு ஈதே என்ன வயங்கு இருள் - அஞ்சனமானது (தன்னோடு ஒப்

பிட்டால்) ஈது (இந்த இருள்) விளக்கேயென்றுசொல்லும்படி (மிகக் கருமையாக) விளங்குகின்ற இருள். தூரக்க - அகற்ற. கடவுள் திங்கள் - தெய்வத்தன்மையுடைய சந்திரன். 'மைவிளக்கியதேயன்ன வயங்கிரு'ளென்றும் பாடம்.

இந்தப் பாட்டிற் 'செல்பவர்' என்பதை இதற்கு முந்திய பாட்டிற் 'போயினன்' என்ற இராமனையும் அவனுடன்போயின இலக்குமணனையுங் குறித்ததாகவும், 'ஏய்க்கும்' என்பதை 'இருள்' என்பதுகொண்டு முடிகிற பெயரெச்சமாகவுங் கொண்டு இங்கே உரை எழுதப்பட்டது. முந்திய உரைகாரர் (ஸ்ரீ சுப்பராயசெட்டியார்) 'செல்பவர்' என்பதைத் "தீத்தொழில் செய்யச் செல்வோருக்குப் பற்றுக்கோடாகச் செல்வோர்" என்றும் 'ஏய்க்கும்' என்பதை வினைமுற்றாகவும் 'வந்தது' என்பதற்குப் பயனில்லையாகவுங் கொண்டார்.

289. மருமத்துத் தன்னை ஊன்றும் மறக்கொடும் பாவம் தீர்க்கும்
உரும்ஒத்த சிலையி னோரை ஒருப்படுத் துதவி நின்ற
கருமத்தின் விளைவை உன்னிக் களிப்பொடு காண வந்த
தருமத்தின் வதனம் என்னப் பொலிந்தது தனிவெண் திங்கள்.

இ - ள். பாவத்தை (அறவே) ஒழியச்செய்யும் வில்லாள(ராகிய இராம லக்குமண)ரை (ப் பாவிகளாகிய அரக்கரை அழிக்கக் காட்டுக்கு வரும்படி அவர்கள் மனம்) உடம்படச்செய்து உபகரித்து (த் தனக்குத் துணையாக) நின்ற (தனது நல்)வினைப்பயனை நினைந்து (அப்படி வந்தவர்களைக்) களிப்புடன் காணவந்த தருமதேவதையின்முகம்போலச் சந்திரன் விளங்கியது.

மருமத்து - (தருமதேவதையின்) நெஞ்சில். தன்னை ஊன்றும் — (பாவம்) தன்னைப் பதியச்செய்யும். மறம் - வன்மை. உரும் - இடி. சிலை-வில். ஒருப்படுத்து-உடம்படச்செய்து; மனம் ஒன்றுபடச்செய்து. தனி - ஒப்பில்லாத.

290. அஞ்சனக் குன்றம் அன்ன அழகனும் அழகன் தன்மேல்
எஞ்சலில் பொன் போர்த் தன்ன இளவலும், இந்து என்பான்
வெஞ்சிலைப் புருவத் தாள்தன் மெல்லடிக் கேற்ப வெள் நூற்
பஞ்சிடைப் படுத்தா லென்ன வெண்ணிலாப் பரப்பப் போனார்.

இ - ள். சீதையின் மென்மையான பாதங்களுக்கு ஏற்றதாகப் பஞ்சைப் பாப்பினாற்போலச் சந்திரன் நிலாவை (த் தரை) யிடையே பரப்ப, (அவளுடன்) இராமனும் இலக்குமணனும் போனார்கள்.

எஞ்சல் இல்-(மாற்றுக்)குறைதல் இல்லாத. பொன்போர்த்தன்ன- பொன்போர்த்தாற்போன்ற. இளவல் - தம்பி. வெம் சிலை புருவத்தாள்- கொடிய வில்லையொத்த புருவத்தையுடைய சீதை. வெள் நூல் பஞ்சு இடை படுத்தால் என்ன - வெண்மையான நூல் (உண்டாவதற்குக் காரணப்பொருளாகிய) பஞ்சை(த் தரை) யிடையே பரப்பினாற்போல.

கரியநிறமுடைய இராமனைப் பொன்னிறமுடைய இலக்குமணன் பின்தொடர்ந்துசென்றதுகொண்டு "அழகன் தன்மேல் எஞ்சலில் பொன் போர்த்தன்ன இளவலும்" என்றார்.

[பூமேல் மிதிப்பினும் பொறாத சீதையின் மெல்லிய பாதங்கள், கடினமான கற்கள் மிகுந்த காட்டிலே, வலிய ஆண்சிங்கம்போன்ற இராமனது கடுநடையைத் தொடர்ந்துநடந்தனவென்றால், அவ்வாறு செய்ய அவளுக்கு ஆற்றலளித்த அன்பினும் அதிகமாக வலியளிப்ப தொன்று உண்டோ! இராமன், சூரியோதயமாகுமுன் இரண்டுயோசனைத்தூரம் சென்றான்.

இதற்கிடையே, இராமனிடம் விடைபெற்றுப்போன சுமந்திரன், ஆறுநாழிகையளவில் அயோத்தியை அடைந்து, வசிட்டனைக் கண்டு வணங்கினான். அவன், நிகழ்ந்தன யாவற்றையுங் கேட்டு, நெடுமூச்செறிந்து, வருந்தி, இனித் தசரதன் இறந்தானென்று கூறிவிட்டுச் சுமந்திரனுடன் தசரதனிருந்த மாளிகைக்குச் சென்றான். சுமந்திரன் திரும்பிவந்தானென்று சொல்லக்கேட்ட தசரதன் இராமனும் உடன் வந்தானென்றெண்ணி, மயக்கந்தெளிந்து, கண்களை விழித்துப் பார்த்து, வசிட்டனைக் கண்டு "இராமன் வந்தானோ" என்றான்.]

291. இல்லையென் றுரைக்க மாட்டான், ஏங்கினன், முனிவன் நின்றான்:
நல்லவன் முகமே நம்பி நடந்தன னென்னும் மாற்றம்,
சொல்லலும், அரசன்சோர்ந்தான். துயர்உறும் முனிவன், "நான் இவ்
அல்லல்காண் கில்லேன்" என்னா, ஆங்குநின் றகலப் போனான்.

இ-ள். இல்லையென்றுசொல்லமாட்டானுய்க், கவலைப்பட்டவனுகி, வசிட்டன், (மறுமொழி கூருமல் வாளா) நின்ருன். (அவன் வாய்திறவாதிருந்தும்) அவன் முகம் (இராமன் வரவில்லை) போய் விட்டானென்ற (மறு) மாற்றத்தைச் சொல்லி (னது போலக் காட்டி)ன வுடனே, தசாதன் (மீண்டும்) சோர்ந் (து மூர்ச்சை அடைந்) தான். (அதனுல்,) துன்பம் மிகுந்த வசிட்டன், "நான் இந்த அல்லற்பாட்டைக் காண (ச் சகிக்க) மாட்டேன்" என்று சொல்லி, அவ்விடத்தினின்று தூரமாகப் போனுன்.

உரைக்கல் ஆற்ருன்—சொல்லுதற்கு வலிமையில்லான் (ஆய்). ஏங்கல்—கவலைப்படல் (சங்க அகராதி). நம்பி—ஆடவரிற் சிறந்தோன்—புருடோத்தமன்; இராமனைச் சுட்டியது. நடத்தல்—செல்லல்(சங்க அகராதி). மாற்றம்—சொல். துயர் உறும்—துன்பம் மிகும். காண்கிலேன்—காணமாட்டேன். 'நடந்தில' னென்றும், ஆண்டு நின்றென்றும் பாடங்கள் உள்ளன.

ஓர் உரையாசிரியர் 'நல்லவன்' என்பதற்குத் தேர்ப்பாகனுன சுமந்திரனென்று பொருள்கொண்டார். அப்பொருள் கொள்ளுதற்கு, முனிவன் மறுமொழி கூறமாட்டாமல் வாளா நிற்க, அரசன், நிகழ்ந்த உண்மையைச் சுமந்திரனுற் றெரியக்கருதி, அவனை நோக்க, அந்த "நல்லவன் முகமே நம்பி நடந்தன னென்னும் மாற்றம்—சொல்லலும், அரசன் சோர்ந்தான்" எனக் கொள்ளுதல் பொருந்தும். மேற்கூறிய பொருள் கொள்ளுதற்கு, மேலும் பொருத்தமாக, இதற்கடுத்தபாட்டில் "நாயகன் பின்னுந் தன்தேர்ப் பாகனை நோக்கி" என வருவதுளது.

292\. நாயகன் பின்னும் தன்தேர்ப் பாகனை நோக்கி "நம்பி
சேயனே? அணிய னே?" என் றுரைத்தலும், தேர்வ லானும்,
"வேய் உயர் கானம், தா னும் தம்பியும் மிதிலைப் பொன்னும்
போயினன்" என்ருன். என்ற போழ்தத்தே ஆவி போனுன்.

இ-ள். (சோர்ந்த) அரசன் (தன் மகன் நிலைமையை அறியும் ஆவலால்) திரும்பவும் (மயக்கம் தெளிந்து) தன் தேர்ப்பாகனுகிய சுமந்திரனைநோக்கி (த் தன்மகன் சிறிதுதூரமே சென்றிருந்தால், திரும்பி வரலாமே யென்னும் ஆசை உண்டாக, அதனைப் பூர்த்திசெய்யக்கருதி,) "இராமன் தூரத்தில் உள்ளானே, சமீபத்தில் உள்ளானே?" என்று

கேட்க, அந்தத் தேர்ப்பாகன் "இராமனும் இலக்குமணனும் சீதையும் வனம் சென்றார்கள்" என்றான். என்றபோதே (இனி, ஆசை அறவே யொழிந்ததென்றெண்ணி அரசன்) உயிர்விட்டான்.

செய்மை—தூரம். அணிமை—சமீபம். வேய் உயர் கானம்—மூங்கில் ஓங்கிய காடு. பொன்—இலக்குமி; சீதையை உணர்த்தியது. 'தேர்வலானும்' என்பது நிற்குமிடத்து "அனையான் செய்ய" என்றபாடம் உண்டு.

அரசன், ஆசை அறவே அறுமளவும், ஆவியை அகலாது தடுத்து நிறுத்திவைத்திருந்தானுதலால், 'ஆவி போனான்' என்பதில் உள்ள 'போனான்' என்னும் தன்வினை 'போக்கினான்' என்னும் பிறவினைப் பொருள்தந்து நின்றது. கம்பராமாயணத்தில் தன்வினைகள் சில இடங்களிற் பிறவினைகளாகப் பிரயோகிக்கப்பட்டிருத்தல் இதற்குமுன் காட்டப்பட்டிருக்கிறது.

"தானும் தேரும் பாகனும் வந்தென் நலன் உண்டான்" என்பதிற் போலத், "தானும் தம்பியும் மிதிலைப்பொன்னும் போயினன்" என்பதிற் பல எழுவாய்கள், அவற்றுள்ளே தலைமையான ஓர் ஒருமை எழுவாயின் பயனிலைகொண்டு முடிந்திருத்தல் கவனிக்கத்தக்கது.

சகிக்கமுடியாத தசரதன் துன்பம், கைகேசி சூழ்வினைப்படலத்தில் 'நாகமெனுங்கொடியாள்' என்ற கக-ம் பாட்டில் தொடக்கப்பட்டு, இராமன் வனம் போந் துன்பத்தோடு விரவி மூன்று குறைந்த நானூறுபாட்டுக்களால் வருணிக்கப்பட்டு, இப்பாட்டில், அவன் மரணத்தோடு முடிக்கப்படுகின்றது. அந்த மரணம், இதனினும், மிகுந்த துன்பமில்லை யென்னுந் துன்பத்தை வாசகர்கள்மனத்தே உண்டாக்கிய "பொழுதத்தே" அவர்கள், ஆ! நாம் "இவ் அல்லல் காண்கில்லே" மென்னும்படியான தசரதனது ஆற்றெணுத் துன்பம், 'அவன் உயிரோடு முடிவடைந்தது!; அவன் இனித் துன்புறுதல் இல்லை' யென்றெண்ணி ஒருவாறான அமைதியை அவர்கள் அடையச் செய்கின்றது. ஏனையோர் துன்பம் இன்னும் உகூ பாட்டுக்களால் இப்படலத்தின் இறுதியளவும் வருணிக்கப்பட்டிருக்கின்றது.

அந்தத்துன்பத்தை, மேற்கொண்டு வருணித்தால், வாசகர் மனந் தாங்கமாட்டாரதென்ற வரையறை வந்தவுடனே, கவி, வேண்டுமென்றே,

அதனை வருணியாமல் நிறுத்திக்கொள்கின்றார். 'வேண்டுமென்றே' யென்றதெதனாலெனில், தசரதனிறந்தபின்; வசிட்டனால் அயோத்திக்கு வரும்படி தூதனுப்பப்பட்ட பரதன் வருதலும் துன்புறுதலும் ஈமக்கடனியற்றலுமாகிய துன்பச் செய்திகள் இயல்பாகத் தொடர்ந்து கூறற்குரியனவாயிருக்க, அவைகளை அவ்வாறு கூறாமல் இடை நிறுத்தியிருக்கின்றாராதலாலென்க.

சோகவருணனையை நெடிது துய்த்துச் சோர்வடைந்துள்ளார்க்குச் சோர்வு தவிர்ந்து கிளர்ச்சியுண்டாகும்வண்ணம் அடுத்த மூன்று படலங்களிற் களிப்புவிளைக்கும் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் இனிது வருணித்துச் செல்கின்றார். சோகநிகழ்ச்சிகளுக்கிடையே களிப்பு நிகழ்ச்சிகளைக் கூறும் இம்முறை, ஆங்கில மகாகவியாகிய ஷேக்ஸ்பியரது நாடகங்கள் முதலிய சிறந்த கிரந்தங்களில் அவலநிகழ்ச்சிகளுக்கிடையே ஆசியநிகழ்ச்சிகள்வருதலை நினைவுகூரச்செய்கின்றது.

கம்பர், மேலேகுறித்த மூன்றுபடலங்களிலே தாம் கிளர்வித்த மனக்கிளர்ச்சியால் வாசகர்மனம் அவலச்சுவையை மீட்டும் அநுபவித்தற் கேற்ற அளவு ஆற்றலடைதலும், அப் படலங்களுக்கடுத்த பள்ளியடைப்படலத்தில், முன் இடை நிறுத்தியவாலாகிய பரதன்வரலும் துன்புறலும் ஈமக்கடனியற்றலுமாகிய செய்திகளை யெடுத்துத் தொடுத்து விரித்து முடித்துவிடுகின்றார்.

[தசரதனுக்குச் சுவாசம் ஓடாமையைக்கண்டு, மூக்கில் விரல்வைத்துப் பார்த்துச், சுவாசித்தல் நின்றுவிட்டது தெரிந்து, நாடித்துடிப்புள்ளதோவென்றுபார்த்து, அதுவும் அடங்கினதை அறிந்து, உயிர் போய்விட்டதுணர்ந்து கோசலாதேவி, வேனிற்காலத்து வெயிலிலகப்பட்ட மென்புழுப்போலத் துன்புறத்துடித்து, விண்ணமிழ்தத்தை யிழந்த விண்ணவர்போல விம்மி, நன்மணியிழந்த நாகம்போல நைந்து, ஆண்துணையைப்பிரிந்த அன்றிற்பேடைபோல அலறி அழுவாளானாள்.]

### கோசலை தசரதனிறந்ததுகண்டு புலம்பல்.

293. "தானே தானே, தஞ்சம் இலாதான், தகவில்லான்,
போனான்! போனான்! எங்களை நீத்திப் பொழுதென்னா,

வானீர் சுண்டி மண் அற வற்றி மறுகுற்ற
மீனே என்ன, மெய் தடு மாறி விழுகின்றாள்.

இ-ள். "(எல்லாச்செல்வமும் படைத்து ஒரு) தாழ்வு(ம்)இல்லாதவன் (ஆன தசரதன், தன்னையே பற்றுக்கோடாகவுடைய எங்கள்பால்) கிருபையில்லாதவனாகி, எங்களைக் கைவிட்டு (நோய்முதலிய சாகும் ஏதுயாதுமின்றித்) தான்தானே (தன் சாவுக்குத் தானே காரணனாய், உயிரை விட்டு) இப்போது (செத்துப்) போய்விட்டான்! (அந்தோ!) (செத்துப்) போய்விட்டான்!" என்று (அலறி அழுவாளாகிக், கோசலையானவள், நீர்நிலைகளில்) சுத்தமான (மேல்) நீர் வற்றி (கீழேயுள்ள அசுத்தமான சேற்று) மண்(ணின்நீரும்) முழுதும்வற்றி (யதனால்வருந்தி) மறுகலுற்ற மீன்போல மெய்தள்ளாடி (வேந்தன்மேனியின்மேல்) விழுந்தாள்.

தஞ்சம்-தாழ்வு (சூடா-நிகண்டு). தகவு-கிருபை (ஷை). நீத்தல்-துறத்தல்—நீக்கல். வால் — சுத்தம். ['வால் (தூய) வெண்சுண்ணம்' மணிமேகலை]. 'தகைவில்லான்' என்றும் பாடம்.

தசரதன் தானாகவே உயிர்விட்டானன்றி, நோய்முதலிய எக்காரணத்தாலும் இறந்திலனென்பாள், தானே தானே போனானென்றாள். அவன் இறந்த துக்கத்தையும் இனி மீளானென்ற ஏக்கத்தையும் உணர்த்தப் போனான் போனானென்று அடுக்கிக்கூறி அழுதாள்.

கம்பர் அவ்வவ்வமயங்களில் தாம் கூற எடுத்துக்கொண்ட விடயங்களுக்கேற்ற சந்தமுடைய பாவினத்தைக் கையாளும் சாதுரியம் கம்பராமாயணத்தில் எங்கும் காணலாம். ஒரு சில உதாரணங்களாகக், கைகேசிசூழ்வினைப்படலத்தில் 'சேணுலாவிய' என்பது முதலிய கவிகளையும், கிளைகண்டுநீங்குபடலத்தில் 'நந்தாவிளக்கனைய' முதலியவைகளையும் சூளாமணிப்படலத்தில் 'வீவாய்நீயிவண்' ஆதியவற்றையுங் காண்க. இங்கே 'தானே தானே' என்ற கலித்துறையும் அதனை அடுத்துவருவனவும் இறந்தார்க்கிரங்கி ஏங்கிப் புலம்பலுக்குப்பொருத்தமாயிருத்தல் கவனிக்கத்தக்கது.

குளங்கள் கால்வாய்கள் முதலிய நீர்த்துறைகளில் நீர்வற்றியபின் மீன்கள் சேற்றுட்புதைந்துகிடந்து சேற்றின் ஈரமே தாரகமாக உயிர் நீங்காதிருப்பதைக் கண்டுள்ளோர், 'நீர் சுண்டி மண் அறவற்றி மறு

குற்றமீன்' என்றது இயற்கைநிகழ்ச்சியை நுணுகி நோக்கி நுவன்ற தென்பதை அறிவர்.

294. "ஒன்றோ, நன்னாட் டுய்க்குவர்; இந்நாட் டுயிர்காப்பா
ரன்றே மக்கட் பெற்றுயிர் வாழ்வார்க் கவமுண்டே.
இன்றே வந்தீண் டஞ்ச லெனாதெம் மகனென்பான்
கொன்றான் அந்தோ! தந்தையை" யென்றாள், குலைகின்றாள்.

இ-ள். "(புத்திரரைப் பெற்றோர் அடையும் பயன்) ஒன்றோ? (ஒன்றன்று, பல. புத்திரர், தம்மைப்பெற்றோரைப் 'புத்' என்னும் நரகத்திற் சேர்வதினின்றும் நீக்கிச்) சுவர்க்கத்திற் சேர்ப்பார்கள். (அம் மட்டோ,) இவ்வுலகத்தில் (பெற்றோர் இருக்குமளவும் அவர்கள்) உயிரை (ப் பேணிக்) காப்பாற்றுவார்கள். (ஆதலால்) புத்திரரைப் பெற்றுவாழ் வார்க்கு (இம்மை மறுமை யிரண்டில் எதிலும்) கெடுதியில்லை. (இப் பெற்றி மற்றைப் பெற்றோரெல்லார்க்கும் உளதாக, எங்கள்மட்டில் இல தாயிற்று. உண்மையில் எங்கள்மகனுயில்லாமல், பெயர்மட்டில்) எங்கள்மகனென்று சொல்லப்படுவான் (ஆன இராமன்) இங்கே யிப் பொழுதே (வந்து) தந்தையைப் பயப்படாதேயென்று (உயிர்விடா திருக்கச்செய்யும்படி) கூறாமற் கொன்றான் அந்தோ!" என்றாள்; (அறிவு) குலைந்தாள் (கோசலை).

ஒன்றோ, ஓர் எண்ணிடைச்சொல். 'பொய்படும் ஒன்றோ' என்ற குறள் உரை பார்க்க. உய்க்குவர்—செலுத்துவர். நன்னாடு, சுவர்க்கத் தைக்குறித்தது. அன்றே அசை; தேற்றமாகவும் கொள்ளலாம். அவம்—கேடு. உண்டே—இல்லை; ஏகாரம் எதிர்மறை. இன்று—இப்போது, ஈண்டு—இங்கு. 'கொன்றானன்றோ' என்பதும் பாடம்.

நன்மையும் தீமையும் உள்ள மண்ணுலகம்போலன்றி, விண் ணுலகம் நன்மைமட்டும் உளதாதல்பற்றி அதனை நன்னாடென்றார்போ லும். இங்கே நன்மை தீமை மூன்றையே சுகதுக்கங்களைக் குறித்தன வாகக்கொள்ளல்வேண்டும். இவ் வுலகை நோக்க, அவ்வுலகம் நல்ல தென்று அதனை 'நன்னாடு' என்றாரெனினுமாம்.

"தன்னொடு சுமித்திரை முதலாயினோரையும் உளப்படுத்திப் புன்மைதோன்ற 'எம்மகன்' என்றமையால் இது மாபுவழூஉமிலை."

295\. "நோயு மின்றி, நோன்கதிர் வாள்வேல் இவையின்றி,
மாயும் செய்கை, மக்களின் ஆகி, மறமன்னன்,
காயும் புள்ளிக் கற்கடம் நாகம் கனிவாழை
வேயும் போன்றான்" என்று மயங்கி விழுகின்றாள்.

இ-ள். "(தசரதன்,) சாகும் செயல், நோயால் இல்லாமல், (பகைவர் வீசிய) வாள் வேல்களா லில்லாமல், மக்களினாலே ஆகி, (தத்தம் சந்ததி காரணமாக இறக்கும்) நண்டு நாகம் வாழை மூங்கில்களை ஒத்தான்" என்று (புலம்பி) மயங்கி விழுந்தாள் (கோசலை).

நோன் கதிர் வாள்—வலிமையும் ஒளியும் உடைய வாள். மறம்—வீரம். காயும் புள்ளிக்கற்கட(க)ம்—பிரகாசிக்கின்ற புள்ளிகளையுடைய நண்டு. கற்கடகமும் எனற்பாலது செய்யுள்விகாரமாய்க் கற்கடமெனக் ககரமும் எண்ணும்மையும் தொக்கது. நாகம் வாழை யிரண்டிலும் எண்ணும்மை தொக்கது. வேய் — மூங்கில். 'மாயுஞ்செல்வ மக்களினாலோ' என்பதும் பாடம். புள்ளிக்கு நண்டென்பதும் பொருள்: அப்பொருள்கொண்டால், 'புள்ளிக்கற்கடகம்' ஒருபொருட்பன்மொழியாம்.

மேலே தசரதன் இறந்ததற்குக் காரணம் மகன் என ஒருமையாக உரைத்தவள் இங்கே 'மாயுஞ்செய்கை மக்களின் ஆகி' என்று பன்மையாகப் பகர்ந்தது, கைகேயி பரதன் நாடாளுதற்கிடையூறாக இராமன் நாட்டில் இராமற் காட்டிற் செல்லும்படி செய்தமையால், இரண்டு மக்களும் அரசன்மரணத்துக்கு ஏதுவாயிருந்தாரென்பது கருதியென்க. வாழையும் மூங்கிலும் காய்த்தல் காரணமாக இறத்தலைக் கண்டவர் பலர் உளர்; ஆயினும் நண்டும் நாகமும் குஞ்சு அல்லது முட்டைகளை ஈனுதலால் இறத்தலைக் கண்டவ ரெவருமிலர்: ஆதலால், மாண்ட தசரதனுக்கு, வாழையும் மூங்கிலும் பிரத்தியட்ச உவமானமாகவும், நண்டும் நாகமும் ஐதிக உவமானமாகவும் கொள்ளல் தகுதி. தாந்தாம் பெற்ற சந்ததி காரணமாகச் சாகும் தாவரங்களான வாழை மூங்கில்போலப், பிராணிகளான நண்டும் நாகமு மில்லையாயினும், அப்படிப்பட்ட வேறு பிராணிகளில்லாம லில்லை. இதற் கோருதாரணமாக, முட்டையாகப் பிறந்து, புழுவாக மாறித், தன்னுடம்பில் உற்பத்தியாம் ஒருவகைச்சத்தினால் தான் தன்னுடம்பைச் சுற்றித் தெற்றிய முட்டைவடிவமான பட்டு நூற்கூட்டுக்குள் உறைந்து, இறுதியாக இறகுடைப் பூச்சியாய், அக்

கூட்டினின்று வெளிப்பட்டுப் பறக்கும் பட்டுப் பூச்சியைக் கூறலாம். இப் பூச்சிகளுள் ஆண் பெண்ணைப் புணர்ந்தவுடன், மத்திரிதேவியை மேவிய பாண்டுபோல, மாண்டுபோகின்றது. பெண்ணும் முட்டையிடு மட்டுமே உயிரோடிருக்கின்றது. இந்த இயற்கை நிகழ்ச்சிகள், ஒவ்வோருயிரும் அதது பயன்படல் முடியுமளவும் உயிர்வாழ்ந்து இனிப் பயன் படுதல் இல்லையென்னும் எல்லையை எய்தியவுடன் இறக்கக்கடவதென்பது தமது கருத்தெனக் கடவுள் கற்பிக்கக்கருதிக்காட்டும் காட்டுக்கள் போலும். (காட்டு—திருட்டாந்தம்).

[மேகத்தினிடத்தே மின்னல் துடித்தல்போலத், தசரதன் மார்பினிடத்தே துடிக்கின்ற கோசலை, "அடீ கைகேயீ! உன் மதிவன்மையால் மன்னை வசப்படுத்திக்கொண்டாய்! வரங்கள் கருவியாக உன்கருத்தை முடித்துவிட்டாய்! ஐயா! அரசே! வானுட்டைக் கவர்ந்த சம்பராசுரனைக் கொன்று அந்நாட்டை அந்நாள் அமரருக்கு அளித்தாய்! இந்நாள் அன்னார்க்கு இனிய விருந்தானாய்! உன் அரசச் செல்வத்தினும் அதிகமான செல்வம் யாதுளதென்று அங்கே சென்றாய்!" என்று இவ்வாறு புலம்பியழச், சுமித்திரையும் அழுதரற்றி வருந்த, அரசமாளிகை ஊழி வந்துற்றதுபோல மிக உலைந்து நிலைகுலைந்தசமயத்திலே, மற்றைத் தேவிமாரும் வந்து மறுகி அலறி அழுதார்கள். ஆயினும், அவர்கள், பிரதானமான தேவியர் மூவர்கள்போலன்றிப் பிள்ளையில்லாரா தலால், தம் ஒரே பற்றாயிருந்த மன்னன் இறந்தபின் மண்ணுலகில்வாழ்தலை வெறுத்து, அவனுடன் விண்ணுலகில் வாழத் துணிந்த ஏதுவால், மிக்க துக்கம் உற்றிலர்.

மனிதசரீரம், அதனைப் பெற்றான் அதனைக் கருவியாகக்கொண்டு செய்தற்குரிய கடமைகளைச் செய்து, பிறவியை நீங்கி, முத்தியை அடைதற்கு, ஈசுவரன் அளித்ததன்றே; அச் சரீரங்களுள் உத்தமமாகப் பயன்படுத்தப்பட்ட தசரதனதுசரீரம், அவன் பிறவிப்] பெருங்கடல் கடந்து முத்திக்கரையேறச் செய்த மரக்கலமாக, அதனை, அவன் பின் செல்லத் துணிந்த தேவியர், தாமும் பிறவிக்கடல் கடந்து முத்திக்கரை யேறுதற்குச் சாதனமாகப், பற்றி விட்டிடாதிருந்தார்.

தசரதன் இறந்தானென்று சுமந்திரன் சொல்லக்கேட்டுவந்த வசிட்டன், விதியின்செயலை நினைந்து நடுக்கடலில் மரக்கலம் உடையக்கண்டு

யாதுசெய்வதென்று தெரியாதயரும் மீகாமனைப்போல மனங்கலங்கி வருந்தினான்.]

296. செய்யக் கடவ செயற்குரிய சிறுவர் ஈண்டை யாரல்லர்;
எய்தக் கடவ பொருள் எய்தா திகவா; என்ன இயல்பென்ன,
மையற் கொடியாள் மகன் ஈண்டு வந்தால் முடித்தும் மற்றென்னத்
தையற் கடலிற் கிடந்தவனைத் தயிலக் கடலின் தலை உய்த்தான்.

இ-ள். (இறந்த தசரதனுக்குச்) செய்யக்கடவன (வான ஈமக் கடன்களைச்) செய்தற்குரிய பிள்ளைகள் இவ்விடத்தில் உள்ளாரல்லர்; (மக்கள் பக்கத்தில் இருக்கும்போதாயினும் அகன்று சென்ற அவர்கள் திரும்பிவந்தபோதாயினும் நிகழ்ததாய் அவர்கள் இல்லாத இப்போது நிகழ்ந்துவிட்டதான இந்தத் தசரத மரணம்போல, விரும்பத்தகாதவை யாயினும்) சம்பவித்தே தீரவேண்டியனவாகிய காரியங்கள் சம்பவியாம லொழியா; (விதியினது இத்தகைய தன்மை) என்னதன்மையென்றும், (தீயதை நல்லதென்று மயங்கும்) மயக்கத்தையுடைய கொடிய கைகேயி யின்மகன் பரதன் இங்கே வந்தால், (அப்போது மேற்கூறிய அந்திய கிரியைகளை அவனைக் கொண்டு செய்வித்து) முடிப்போமென்றும் (சுமந்திரன்முதலியோர்க்குச் சொல்லிப்) பெண்ணின் வெள்ளத்திடைக் கிடந்த தசரதனை (எடுத்து) எண்ணெய்வெள்ளத்திடை யிட்டான் (வசிட்டன்).

செய்யக்கடவ(ன) - செய்து தீரவேண்டியவை. ஈண்டையார் - இவ் விடத்தினர். எய்தல்-சம்பவித்தல் (சங்க அகராதி). பொருள்-காரியம் (ஷை. 'எண்ணிய பொருளெலா மினிது முற்றுக' எனப் பாசுராமப்படலம் ௪௦-ம் பாட்டில் வருதலுங் காண்க). இயல்பு - தன்மை. முடித்தும் - முடிப்போம். தலை-இடம். உய்த்தான்-சேர்த்தான். 'கடனின்றெடுத்த வனை' என்றும் பாடம்.

இப் பாட்டின் இறுதியடியிற் பெண்கள்மிகுதியையும் எண்ணெய் மிகுதியையும் கடல் என்ற சொல்லால் உணர்த்தித் தசரதனை ஒரு கடலினின்றெடுத்து மற்றொருகடலிலிட்டதாக நயம்பட உரைத்த கவிசாதுரியம், கண்டு களிக்கத்தக்கது.

இப்பாட்டுக்கு முந்தியபாட்டாக, யான் பார்த்த அச்சிட்ட பிரதிகளில் இல்லாத, ஒரு பாட்டுத் திருவாளர் கவிராச ஈசுரமூர்த்தியா பிள்ளையவர்கள் ஏட்டுப்பிரதியி லிருக்கின்றது. அதன்கருத்து, மேலே கதைத் தொடர்ச்சிப் பகுதியில் எடுத்தாளப்பட்டிருக்கின்றது. அப் பாட்டு வருமாறு:—

வந்த முனியவ் வரங்கொடுத்து மகனை நீத்த வன்கண்மை
யெந்தை தீர்த்தா னெனவுள்ளத் தெண்ணியெண்ணி யிரங்குவான்
உந்து கடலிற் பெருங்கலமொன் றுடையாநிற்கத் தனிநாய்கன்
நைந்து நீங்கச் செயலோரா மீகா மனைப்போ லேனவுற்றான்.

297. மீனீர் வேலை முரசியம்ப, விண்ணோர் ஏத்த, மண் இறைஞ்சத்,
தூநீர் ஒளிவாள் புடைஇலங்கச், சுடர்த்தேர் ஏறித் தோன்றினான்,
வானே புக்கான் அரும்புதல்வன், மக்கள் அகன்றார், வருமளவும்,
யானே காப்பன் இவ் வுலகை என்பான் போல, எறிகதிரோன்.

இ-ள். 'என் அருமந்த மைந்தன் (தசரதன்) இறந்தான், (என் மரபில் உதித்த இராமன் முதலிய அவன்)மக்கள்(காட்டிற்கும் வேற்றுநாட்டிற்கு மாகத்) தூரமாகச் சென்றிருக்கின்றார்கள், (இச்சமயத்தில் இராச்சியத் தைக் காத்தற்குரியார் என்னையன்றி யாருமில்லை, ஆதலால், அந்த மக்கள்) வந்துசேரும்வரை யானே இவ்வுலகத்தைக் காப்பேன்' என்று கூறி (அயோத்தியைநோக்கிப் புறப்படலா)னான்போலச் சூரியன், கடல் முரசுமுழங்க, விண்ணவர் துதிக்க மண்ணவர் வணங்கத் தன் ஒளிவாள் பக்கத்திலேவிளங்கத் தேர் (மீது) ஏறித் தோன்றினான்.

மீன் நீர் வேலை முரசு – மீன்களையும் நீரையும் உடைய கடலாகிய பேரிகை. இயம்ப-ஒலிக்க. மண், மண்ணிலுள்ளார்க்கு ஆகுபெயர். ஏத்த—துதிக்க. இறைஞ்ச—வணங்க. தூநீர் ஒளிவாள் – பரிசுத்தத் தன்மையுடைய கிரணமாகிய வாள். புடை—பக்கம்; அருகு. சுடர்—ஒளி. அரும்புதல்வன்—அருமையான மகன்—தசரதன். தசரதன் சூரியவமி சத்தினனாதலின், அவனைச் சூரியன் தன் மகனென்றானாகக் கூறினார். எறிதல்—(ஒளி) வீசுதல். திரை எறிகடலை 'எறிகடல்' என்றாற்போல, ஒளி எறிகதிரோனை 'எறிகதிரோன்' என்றார்.

அரசர், வாள்புடை விளங்க, முரசு முழங்கச், சனங்கள் துதித்து வணங்க, ரதாரூடராய் உலாவரல்போல, 'யானே காப்பன் இவ்வுலகை யென்பான்போல'த் தேரில் எழுந்து வானவீதியில் உலாவராலுற்ற உதய சூரியனுக்கு, வாள்—(ஒளி)புடை விளங்கலையும் கடல் முழங்கலையும் சந்தியாவந்தனஞ்செய்வார் தோத்திரித்து நமக்கரித்தலையும் அரசச்சின்னங்களாகக் கூறினர். இப்பாட்டு, அதி கம்பீரமும் மிக்க இனிமையும் ஒருங்குடைய பாட்டுக்களுளொன்றென்று கவிச்சுவையுணரவல்லார் கண்டுகளித்துச் சுவைத்துச் சுகிப்பரென்பதில் ஐயமில்லை.

[இராமனுடன் வனஞ் சென்றிருந்த சனங்கள், அவனுக்குற்றதை உன்னி, மெத்தவும் விம்மி, நைந்து நொந்து, அவன் ஞாபகமேயாகித் தம்மை மறந்து உறங்கி, அவன் பிரிந்துசென்றதைத் தெரிந்திடாராய்க் கிடந்தார்கள். விடிந்தவுடன் எழுந்து, அவன் இருந்த இடமடைந்து, அவனைக் காணாமல் திடுக்கிட்டுத் தியங்கித் தேம்பி, 'அந்தோ! துன்பத்தால் நெடுநேரம் மூடாதிருந்த கண்கள் மூடி நம்மைக் கெடுத்தன!' வென்று விம்மி, அழுது விழுந்தார்கள்; புரண்டார்கள்; எழுந்தார்கள்; மீண்டும் விழுந்தார்கள்; திரும்ப எழுந்து திக்கெல்லாம் ஓடினார்கள்; தேடினார்கள்; 'நம்மைத் துக்கக் கடலுள் விட்டுச் சென்றான்!' என்றார்கள்; 'அவன் செய்கை கொடிது! கொடிது!!' என்றார்கள்; 'அவன் செல்லுவேனென்று சொல்லிய தண்டகவனம் இந்த உலகத்திலே தானே உள்ளது; அதனை, அறிவு துணையாக, நாடித் தேடி அடைவோம்; தேர் சென்ற வழியே செல்வோம்' என்றார்கள்; அவ்வாறு செல்வாராகித் தேர் குறித்துச் சென்ற திசை, ஊர்குறித்துச் சென்றதே யென்று தெரிந்து, செத்துப்போன சீவன் திரும்பிவரப்பெற்றார்போன்று "இனி, யாரும் அஞ்சாதீர்கள்! இராமன் அயோத்திக்குத் திரும்பிப் போயிருக்கிறான்!" என்று, இடியோடு கூடிய மேகம் பேரோசையுடைய கடலோடு ஒன்றுசேர்ந்து பெருமுழக்கஞ்செய்தாற்போல, ஆரவாரித்தார்கள்: வாளரவு கடித்து மாளலுற்றார் மருந்துகுடித்து மீளலுற்றார் போன்றார்கள்: உலகமுடிவுகாலத்திற் கரைகடந்து படர்ந்த கடல்

சிருஷ்டிகாலத்தில் திரும்பிவந்து தன் இடத்துக்குள் அடங்குதல் போல, நகர்கடந்து வனமடைந்த சனங்கள் திரும்பிவந்து நகர்க்குள் அமர்ந்தார்கள்.

அமர்ந்தவர்கள், அரசன் இறந்தமை அறிந்து தாமிறந்தார் போன்றார்கள். இராமன் திரும்பினானல்லனென்பதையும் தெரிந்தார்கள். அப்போது, அவர்கள் அடைந்த ஆற்றொணாத அவத்தை ஆராலும் அறிவித்தற் கரிதாயிருந்தது. அவ்வளவு போவத்தை அடைந்தவர்கள் ஏன் இறந்தாரில்லையெனில், யாரியார் எவ்வெக்காலத்தில் இறத்தற்பாலரென விதி நியமித்திருக்கிற காலாவதிகள் உள்ளன அன்றோ, அந்த அவதிகள் எய்தாமைப்பால் இறந்திலரென்க. அவர்கள் மாண்டுபோன மன்னனுக்கும் உதவாராய், வனம்போன மைந்தர்க்கும் உதவாராய் வருந்துவாராயினர். திரும்பக் காடுசெல்லச் சிந்தித்த அவர்களை நோக்கி, வசிட்டன், "நகரத்தீரே! இராமன், தான் நாட்டிலிருந்தால், தசரதன் சத்தியம் தவறினவனாகும் பழிப்பை ஒழித்து, அறத்தை நிறுத்த, நாடு நீங்கிக் காடுசேர்ந்தான். அதற்கு நீங்கள் பரிந்து வருந்தல் தகுந்த தன்று" என்று தேறுதல் வார்த்தைகள் செப்பி, அவர்களை அயோத்திநகரத்திலே அமரும்படி ஆஞ்ஞாபித்தான். அவர்கள், வடவாமுகாக்கினிக் கஞ்சிக் கரைகடவாத கடல்போல, அவன் ஆணைக் கஞ்சி அயோத்திநகரத் தெல்லைகடவாராய் அந்நகரத்திலே அமர்ந்தார்கள்.

அமரர்கள் செய்த அருந்தவப்பயனே அரசன் கட்டளையாக, அந்தக் கட்டளைப்படியே காடுசென்ற இராமன் செய்தியை இனிக்கூறுவாம்]

தைலமாட்டுப்படலம் முற்றுப்பெற்றது.

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

# நந்திக்கலம்பகத்திற்

## சிலபிரதிகளில் அதிகமாகக்காணப்பட்ட பாட்டுக்கள்.

### நேரிசைவெண்பா.

என்னையா னேபுகழ்ந்தே னென்னுதே யெப்புவிக்கு
மன்னர்கோ னந்தி வரதுங்கன்—பொன்முடியின்
மேல்வருடுந் தொண்டை விரைநாறு மின்னமுமென்
கால்வருடுஞ் சேடியர்தங் கை. (க)

கைக்குடமி ரண்டுங் கனகமும் பக்குடமும்
முக்குடமுங் கொண்டான் முறியாதே—மிக்கபுகழ்
வேய்க்காற்றி லுல்விளங்கும் வீரநந்தி மாகிரியி
லீக்காற்றுக் காற்று விடை. (உ)

இந்தப் புவியி லிரவலருண் டென்பதெல்லா
மந்தக் குமுதமே யல்லவோ—நந்தி
தடங்கைப்பூ பாலன்மேற் றண்கோவை பாடி
யடங்கப்பூ பாலரா னார். (ங)

### கட்டளைக்கலித்துறை.

அடிவிளக் குந்துகி லாடை விளக்கு மரசர்பந்திப்
பிடிவிளக் கும்மெங்க ளூரார் விளக்கும் பெரும்புகழாற்
படிவிளக் குந்நந்தி யெங்கோன் பெரும்படை வீட்டுக்கெல்லாம்
விடிவிளக் கும்மிது வேநாங்கள் பூண்பதும் வெண்முத்தமே. (ச)

### நேரிசைவெண்பா.

ஏம வரைசலிக்கு மேழாழி யுங்கலங்கும்
காம வயிரி களங்கறுக்குஞ்—சோமன்
வருநந்தி யானத்து மாளுரை விட்டுப்
[1]பொருநந்தி போந்த பொழுது. (ரு)

### கட்டளைக்கலித்துறை.

ஊரு மரவமுந் தாமரைக் காடு முயர்வனமுந்
தேரு முடைத்தென்பர் [2]சிறுத நாணந்தி சிறியபின்
பூரு மரவமுந் தாமரைக் காடு முயர்வனமுந்
தேரு முடைத்தென்ப ரேதெவ்வர் வாழுஞ் செழும்பதியே. (௬)

---

(பி-ம்.) 1'பொருநந்தி நீபோன போது', பொருநந்தி நீபோந்த போது.
2, சிறுத மூன்னந்தி.

### கலிநிலைத்துறை.

வாழு நாளினிற் றமைப்பரித் தவர்தமை வருத்தித்
தாழு நாளினிற் சரணமென் றவரடி சாரு
மேழை போன்முலை வளருநா ளிடைக்கிட ரிழைத்து
வீழு நாளிலுங் காப்பதுன் கடனென விதித்தாள். (௭)

### கட்டளைக்கலித்துறை.

திருத்தேர் புகழ்நந்தி தேசபண் டாரிதெள் ளாறைவெற்பில்
மருத்தேர் குழலிக்குக் கார்மூந்து மாகின்—மகுடரத்னப்
பரித்தெரும் பாகுமங் கென்பட்ட தோவென்று பங்கயக்கை
நெரித்தே வயிற்றில்வைத் தேங்கிற்ப ளேவஞ்சி நெஞ்சுலர்ந்தே. (௮)

### கட்டளைக்கலிப்பா.

சிவனை முழுது மறவாத சிந்தையான்
செயமுனி யுறவு தவிராத நந்தியூர்(க்)
குவளை மலரின் மதுவாரும் வண்டுகாள்
குமிழி சுழியில் விளையாடு தும்பியே
அவனி மழைபெய் குளிர்காலம் வந்ததே
யவரு மவதி சொனநாளும் வந்ததே
கவலை பெரிது பழிகாரர் வந்திலார்
கணவ ருறவு கதையாய் முடிந்ததே. (௯)

### நேரிசைவெண்பா.

தொடர்ந்து பலரிரந்த தொண்டையந்தார் நாங்க
ணடந்த வழிகடொறு நாறும்—படர்ந்த
மலைகடாம் பட்டனைய மால்யானை நந்தி
முலைகடாம் பட்டசையா முன். (௧௦)

### தரவுகொச்சகக்கலிப்பா.

நம்மாவி நங்கொழுநர் பாலதா நங்கொழுநர்
தம்மாவி தம்பால தாகுந் தகைமையினுற்
செம்மாலை நந்தி சிறுகுடிநாட் டன்னமே
தம்மாவி தாமுடைய ரல்லரே சாகாமே. (௧௧)

### எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மங்கையர்கண் புனல்பொழிய மழைபொழியுங் கால
மாரவேள் சிலைகுனிக்க மயில்குனிக்குங் காலங்
கொங்கைகளுங் கொன்றைகளும் பொன்சொரியுங் காலங்
கோகனக நகைமுல்லை முகைநகைக்குங் காலஞ்

செங்கைமுகி லனையகொடைச் செம்பொன்பெய் [1]யேகத்
தியாகியெனு நந்தியருள் [2]சேராத கால
மங்குயிரு மிங்குடலு மானமழைக் கால
மவரொருவர் நாமொருவரான கொடுங்காலம். (௧௨)

அன்னையரும் தோழியரு மடர்ந்துபொருங் கால
மானிபோ யாடிவரை யாவணியின் காலம்
புன்னைகளும் பிச்சிகளுந் தங்களின மகிழ்ந்து
பொற்பவள வாய்திறந்து பூச்சொரியுங் காலஞ்
செந்நெல்வயற் குருகினஞ்சூழ் கச்சிவள நாடன்
றியாகியெனு நந்திதடந் தோள்சேராக் கால
மென்னையவ ரறமறந்து போனாரே தோழி
யிளந்தலைகண் டேநிலவு பிளந்தெரியுங் காலம். (௧௩)

## நேரிசைவெண்பா.

ஈட்டு புகழ்நந்தி பாணநீ யெங்கையர்தம்
வீட்டிருந்து பாட விடிவளவுங்—காட்டிலழும்
பேயென்று ளன்னை பிறர்நரியென் றார்தோழி
நாயென்று னீயென்றே னான். (௧௪)

## கட்டளைக்கலித்துறை.

கோட்டை யிடித்தகழ் குன்றாக்கிக் குன்றக ழாக்கித்தெவ்வர்
நாட்டை மிதிக்குங் கடாக்களிற் றானந்தி நாட்டினிற்பொற்
றோட்டை மிதித்தந்தத் தோட்டுடு [3]பாய்ந்து சுருளளகக்
காட்டை மிதிக்குங் கயற்கண்ணி யோசுரங் கால்வைப்பதே. (௧௫)

## நேரிசைவெண்பா.

செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தனமென் றாரோ தடவினார்—பைந்தமிழை
யாய்கின்ற கோனந்தி யாகந் தழுவாமல்
வேகின்ற பாவியேன் [4]மெய். (௧௬)

## கட்டளைக்கலித்துறை.

சதிராக நந்தி பரன்றனைக் கூடிய தையலரை
யெதிராக்கி யென்னை யிளந்தலை யாக்கியென் னங்கமெல்லா
மதிராக்கித் தூசு மழுக்காக்கி யங்கமங் காடிக்கிட்ட
பதராக்கி யென்னையும் பற்றாம லாக்கிய பாலகனே. (௧௭)

## நேரிசைவெண்பா.

ஓடுகிற மேகங்கா ளோடாத தேரில்வெறுங்
கூடு வருகுதென்று கூறுங்கோ—ணடியே

(பி-ம்) 1. மேகத். 2. சேராதார் போல. 3. சென்று. 4. மேல்.

நந்திச்சி ராமனுடை நன்னகரி னன்னுதலைச்
சந்திச்சி ராமாகிற் றான். (௧௮)

தரவுகொச்சகக்கலிப்பா.

மண்ணெலா முய்ய மழைபோல் வழங்குகரத்
தண்ணுலா மாலைத் தமிழ்நந்தி நன்னாட்டிற்
பெண்ணிலா ஊரிற் பிறந்தாரைப் போலவரும்
வெண்ணிலா வேயிந்த வேகமுனக் காகாதே. (௧௯)

கட்டளைக்கலித்துறை,

காவிய னந்தமெடுத்தான் மதன்கைக் கரும்பெடுத்தான்
மேவிய னந்தவனம்புகுந் தானினி வேட்டஞ்செய்வா
னாவிய னந்தமுண்டோ வுயிர்தான்விட் டகலுமுன்னே
தேவிய னந்திக்கிங் காரோடி விண்ணப்பஞ் செய்குவரே. (௨௦)

நேரிசைவெண்பா.

செய்ய கமலத் திருவுக்கு முன்பிறந்த
தைய லுறவு தவிர்ந்தோமே—வைய
மணக்கும் பெரும்புகழான் மானபர னந்தி
யிணக்கம் பிறந்தநா ளின்று. (௨௧)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

*வானுறைமதியிற்புக்கதுன்றட்பமறிகடல்புக்கதுன்பெருமை
கானுறைபுலியிற்புக்கதுன்சீற்றங்கற்பகம்புக்கதுன்கொடைகள்
தேனுறைமலராளரியிடம்புகுந்தாள்செந்தழல்புக்கதுன்மேனி
யானுமென்கலியுமெவ்விடம்புகுவோநந்தியேயெந்தைபிரானே. (௨௨)

கட்டளைக்கலித்துறை.

வாரூரு மென்முலை வார்த்தைகண் டூரு மதிமுகத்தில்
வேரூரு மேனி வியன்றளி ரூரும் விசயனுக்குத்
தேரூரு மானந்தி தேசபண் டாரிதெள் ளாறைவெற்பிற்
காரூர் குழலிக்குக் காதள வூருங் கடைக்கண்களே. (௨௩)

பண்டித. அ. கோபாலையர்.

---

* இப்பாட்டுச் சிலபிரதிகளில்,—

வானுறுமதியையடைந்ததுன்வதனமறிகடல்புகுந்ததுன்கீர்த்தி
கானுறுபுலியையடைந்ததுன்வீரங்கற்பகமடைந்ததுன்கரங்க
டேனுறுமலராளரியிடம்புகுந்தாள்செந்தழலடைந்ததுன்றேக
நானுமென்கலியுமெவ்விடம்புகுவேநந்தியேநந்தயாபரனே.

எனப் பாடபேதங்களுடன் காணப்படுகிறது.

உ

# *ஸ்வப்ன வாசவ தத்தம்.

## கதைச்சுருக்கம்.

வத்ஸநாட்டையரசாண்டுவந்த உதயனன் பாண்டவர்புதல்வனான அபிமன்யுதொடங்கி இருபத்தைந்தாந்தலைமுறையிற் பிறந்தவன். அவன் குடிப்பிறப்பு, கல்வி, செல்வம், இளமை, அழகு முதலிய சிறப்புக்களோடு இசைநூல்வன்மையிலும் ஒப்பற்றுவிளங்கினான். அதுகண்டு அவந்திநாட்டரசன் பிரத்தியோதனன் தன் னருமைப்புதல்வி வாஸவதத்தையை அவ்வுதயனனுக்கு மணஞ்செய்விக்க விரும்பினனாயினும், உதயனன் தன்விருப்பத்தைத் தூதர்மூலமாகத்தெரிவியாது இறுமாப்புற்றிருந்தான். அவனை நேர்வழியில் மருமகனாக்குவது அசாத்தியமாயிருந்ததால் அவன் யானைக்காட்டில் வேட்டையாடிக்கொண்டிருக்கும்போது வயிற்றிற் போர்வீரர்களைமறைத்துவைத்துக்கொண்ட ஓரியந்திரயானைமூலமாகப்பிரத்தியோதனன் அவனை வஞ்சித்துப்பிடித்துச் சிறையிலிட்டுத் தன்புதல்வி வாஸவதத்தைக்கு வீணைகற்பிக்கும்படி கட்டளையிட்டான். அவ்வாறு தனியிடத்திலிருந்து வீணைகற்பித்துவருகையில் அவ்விருவருக்கும் காதல் தோன்றி வளர்வதாயிற்று. அப்படியிருக்கையில், உதயனன், மந்திரிகளிற் சிறந்த யௌகந்தராயணனது சூழ்ச்சித்திறத்தாற் சிறையினின்றும் வெளிவந்து வாஸவதத்தையுடன் தன்னகர் அடைந்தான். பிரத்தியோதனனும் அவனது பட்டமஹிஷியும் தம்மகளுடைய வுருவத்தையும் மருமகனுடைய உருவத்தையும் சித்திரத்தில் எழுதுவித்துத் திருமணவிழாக் கொண்டாடினர். பின் உதயனன் தன் இனிய காதலியோடு மகிழ்ந்து ஓரிடத்தில் இருந்துவரும்போது ஆருணியென்றபகையரசனால் வத்ஸநாட்டிற் பெரும்பகுதியும் அபகரிக்கப்பட்டது. இழந்தநாட்டை மீண்டும்பெற விரும்பிய யௌகந்தராயணன், அது மகதவரசனான தர்சகனது துணையாற் சாத்தியமாயிருத்தலையறிந்து, அதுவும் அவன் சோதரி பத்மாவதியை உதயனனுக்கு மணம்செய்விப்பதால் எளிதிற்பெறக்கூடியதென்றுகருதி, மற்ற

* இது, வடமொழியில் பாஸமஹாகவியால் இப்பெயருடன் இயற்றப் பெற்ற நாடகநூலின் தமிழ் மொழிபெயர்ப்பு.

மந்திரிகளோடு ஆலோசித்துக்கொண்டு உதயனனறியாது சிலகாலம் தன் கணவனைப் பிரிந்திருக்கும்படி வாஸவதத்தையை வேண்டிக்கொண்டனன். பிறகு யௌகந்தராயணன் உதயனன் இலாவாணகமென்ற நகரினின்றும் வெளியே வேட்டையாடச்சென்றிருந்தபோது, ராஜமாளிகையை அக்கினிக்கிரையாக்கி, அத்தீயில்வாஸவதத்தை இறந்தாள் என்றும், அவளைக் காப்பாற்றச்சென்ற யௌகந்தராயணனும் அத்தீயில்விழுந்திறந்தானென்றும் பொய்வதந்தியைப் பரவச்செய்து, தான் மாறுவேடம்பூண்டு வாஸவதத்தையுடன் மகதநாடடைந்து அங்குள்ள ஒரு தவவனத்தில் வந்திருக்கும் பத்மாவதியிடம் கணவனைப் பிரிந்த தன்சோதரியென்று சொல்லி வாஸவதத்தையை அடைக்கலமாக வைத்துவிட்டு மேற்செய்யவேண்டுவனவற்றைமுடிக்கச்சென்றான். வேட்டையாடித் திரும்பிவந்த அரசன் வாஸவதத்தையிறந்தாள் என்று கேட்டுத் தானும் உயிர்துறக்கமுயலுகையில் உருமண்வான் என்ற அமைச்சனால் தடுக்கப்பட்டு ஆறுதல் அடைந்தான். இவ்வாறு சிலகாலம் செல்ல, உதயனனுக்கு ஓர்காரியத்தைமுன்னிட்டு மகதவாசனிடம் செல்லவேண்டியதாயிருந்தது. அவ்வரசன் அவனைத் தன்சோதரிக்குத் தக்ககணவனாகக் கண்டு அவளை மணம்செய்துகொடுத்தான். அவளுடன் இருக்குங்காலத்தில் ஒருநாள் உதயனன் வாஸவதத்தையை நினைத்துக் கனவிற் புலம்புகையிற் பத்மாவதியின் தோழியாக அங்கிருந்த வாஸவதத்தை அவனோடு சல்லாபம்செய்துவிட்டு அவன் விழித்ததும்மறைந்து சென்றனள்: பிறகு மகதவரசனது துணையால் உதயனன் இழந்தராஜ்யத்தை மீண்டும் பெற்றனன். இஃதிவ்வாறிருக்க; வாஸவதத்தையிறந்தாள் என்று கேட்டு வருத்தமுற்ற அவள்தாய் தான் திருமணவிழாக் கொண்டாடிவந்த சித்திரப்பலகையை உதயனனுக்கு அனுப்பினாள். பத்மாவதி சித்திரப்பலகையில் வாஸவதத்தையின் உருவத்தைக்கண்டு அதனையொத்த ஒருத்தி தன்னிடம் இருப்பதாகத் தன்கணவனிடம் சொன்னாள். அப்பொழுது யௌகந்தராயணனும் அடைக்கலமாகவைத்த தன்சோதரியைத் திரும்பிப்பெறவந்தவன், தானும் வாஸவதத்தையும் மறைந்திருந்ததை உதயனனுக்குத் தெரிவித்துக்கொள்ள எல்லோரும் ஆனந்தத்துடன் வாஸவதத்தையின் க்ஷேமஸமாசாரத்தைப் பிரத்தியோதனனிடம் சொல்லப்புறப்பட்டனர்.

---

## நூல்.

### முதல் அங்கம்.

(நாந்தியின்முடிவில் சூத்திரதாரன் பிரவேசித்து)

சூத்திரதாரன்:—உதித்தெழும் இளஞ்சந்திரனைப்போல் ஒளிவீசுவதும், மதுவாற் சோர்வடைந்ததும், திருமகள்வாசத்தாற் பூரித்ததும், வஸந்தகாலம்போல் அழகியதுமான பல தேவாதுபுஜம் உங்களைக் காத்தருளட்டும்.
பெரியோர்களிடம் ஓர் விக்ஞாபனஞ்செய்துகொள்ளுகிறேன். ஆ! இதென்ன! நான் தெரிவிக்கப்புறப்படும் பொழுதே ஏதோ சப்தம்கேட்கிறது. இருக்கட்டும். என்னவென்றறிகிறேன். (போதல்)

(திரைக்குள்)

விலகுங்களையா! விலகுங்கள்.

சூத்திர:—சரிதான், தெரிந்தது.
கன்னிகையைப் பின்பற்றிவரும் மகதவாசரது நம்பிக்கையுள்ள ஏவலாளர் தவவனத்திலுள்ள அனைவரையும் துணிவுடன் விலக்குகிறார்கள்,

(ஸ்தாபனை முற்றிற்று.)

(இரண்டுசேவகர் வருதல்.)

சேவகர்:—விலகுங்களையா! விலகுங்கள்!

(துறவிவேஷம்பூண்ட யௌகந்தாரயணனும், ஆவந்திகை வேஷம்பூண்ட வாஸவதத்தையும் வருதல்)

துறவி:—(காதுகொடுத்துக்கேட்டு) என்ன! இங்கேயும் விலக்குகிறார்களே! ஆச்சிரமத்தில்வஸித்து மாவுரியுடுத்து வனத்திலுள்ள காய்கனிகளைத் தின்று வாழ்ந்துவரும் தீரர்களான இத்துறவிகளையும் ஏன் பயமுறுத்துகிறார்கள்? நிலையற்றசெல்வத்தாற் செருக்குற்று மதிமயங்கி, மூடர்களான ஏவலாட்களால் தன் ஆணையைச் செலுத்தி இத் தபோவனத்தையும் ஓர் நகர்ப்புறமாகச்செய்பவன் யார்?

ஆவந்தி:—யார் நம்மைவிலக்குகிறது?

துறவி:—அறநெறியினின்றும் தன்னைவிலக்கிய ஒருவன்தான்.

ஆவந்தி:—அதுவல்ல நான்சொல்லவந்தது. நானும் விலக்கப்படும்படி ஆயிற்றே என்றுதான்.

துறவி:—உண்மையறியப்படாதபொழுது தேவர்களும் இவ்விதம் அவமதிக்கப்படுகிறார்கள்.

ஆவந்தி:—இந்த அவமானந்தான் என்னைத் துன்புறுத்துகிறது. காட்டுவழிநடக்குஞ் சிரமங்கூட எனக் கவ்வளவில்லை.

துறவி:—இவ் விஷயங்களெல்லாம் நீ அனுபவித்துத் துறந்தவைதானே. கிலேசப்படுதற்குரிய காரியமல்லவே. முன் நீயும் பரிஜனத்துடன் களிப்புற்று நடந்ததுண்டு. நம்மரசர் வெற்றிபெற்ற பிறகு யாவரும் புகழும்படி நீ மீண்டும் இந்தப்பதவி அடைவாய், ஏனெனில் இவ் வுலகத்திற் பாக்யமென்பது சகடக்கால்போற் கீழ்மேலாய் மேல்கீழாய்ச் சுழன்றே செல்வதாகும்.

சேவகர்:—விலகுங்களையா! விலகுங்கள்.

(கஞ்சுகி வருதல்)

கஞ்சுகி:—ஸம்பஷக! விலக்காதே, விலக்காதே! அரசருக்கு வீணுப் பழியைவிளைக்காதே ஆச்சிரமவாசிகளிடம் கடுஞ்சொற்பேசுதல் தகாது. நகரத்தில்வழங்கும் இத்தகைய அவமதிப்பை ஒழித்தற்கன்றோ சுத்தமனமுடைய இப் பெரியோர்கள் காட்டில் வந்து காலங்கழிக்கின்றார்கள்.

சேவகர்:—அப்படியே, ஐயா! (போதல்)

துறவி:—நல்லவேளை. இவன் அறிவுள்ளவனாகத் தோற்றுகிறான். அம்மா! நா மிவனருகே செல்வோம்.

ஆவந்தி:—அப்படியே.

துறவி:—நெருங்கி ஏன் ஐயா! ஜனங்களை இப்படி விலக்குகிறார்கள்?

கஞ்சுகி:—தவமுனிவரே!

துறவி:—(தனக்குள்) தவமுனிவரென்பது நல்லசொல்லே. ஆயினும், இப்பொழுது புதிதாகக் கேட்கப்படுவதால் என்மனத்திற்குப் பொருந்தவில்லை.

கஞ்சுகி:—கேளுங்கள்! இவள், பெரியோரால் தர்சகன் என்று பெயர் பெற்ற எங்கள்மஹாராஜாவின் சகோதரி பத்மாவதி. இவ் வாச்ரமத்தில் மஹாராஜாவின் தாயாகிய பெருந்தேவியைப் பார்த்துவிட்டு அவளிடம் விடைபெற்று ராஜகிருகத்துக்குப் போவாள். இன்று இங்கே தங்கியிருக்க அவள் விரும்புகிறாள். நீங்கள் தீர்த்தம் ஸமித்து மலர் தருப்பை முதலிய தவச் செல்வங்களை இங்கிருந்து தடையின்றிப் பெற்றுக்கொள்ள லாம். எங்கள் இளவரசி தருமத்தில் விருப்பமுடையவள்; அதற்கிடையூறுவரப் பொறுக்கமாட்டாள்; இது அவள்குல தருமம்.

துறவி:—(தனக்குள்) அப்படியா! இவள்தானோ மகதராஜகுமாரிபத்மா வதி. எங்க ளரசாதுதேவியாய் அமைவாள் என்று புஷ்பகர் பத்ரகர்முதலியஸித்தர்கள் கூறியது இவளைத்தானோ? நாயக ரது தலைவி என்றவுடன் எனக்கு இவளிடம் மிக்க உரிமை தோன்றுகிறது. ஏனென்றால் வெறுப்பும் விருப்பும் உண் டாவதற்கு நினைப்பே நிமித்தமாகிறது.

ஆவந்தி:—(தனக்குள்) இளவரசி என்றதும் எனக்கு இவளிடத்திற் சகோதரவாஞ்சையுண்டாகிறது.

(பரிஜனத்துடன் பத்மாவதியும் சேடியும் வருதல்.)

சேடி:—வாருங்கள்! இளவரசி! இங்கேவாருங்கள்!

(வாசல் திறந்து அங்கு ஒருதவமாது உட்கார்ந்திருக்கிறாள்)

தவமாது:—வாருங்கள்! ராஜகுமாரி!

ஆவந்தி:—(தனக்குள்) இவள்தானோ அந்தராஜகுமாரி? குலத்திற்கிசைந்த அழகு.

பத்மா:—ஆர்யே! நமஸ்கரிக்கிறேன்.

தவமாது:—சிரஞ்சீவியாயிரு, குழந்தாய்! உள்ளேவா! தவவனம் விருந்தினர்களுடைய சொந்தவீடுதானே!

பத்மா:—ஆமாம்; ஆர்யே! எனக்குக் கூச்சமொன்றுமில்லை. உமது உபசாரமொழியால் அநுக்கிரகமெய்தினேன்.

ஆவந்தி:—(தனக்குள்) உருவம் மட்டுமன்று இவளது சொல்லும் மிக இனிது.

தவமாது:—(சேடியைநோக்கி) ராஜகுமாரியை மணம்புரிய ஓர் அரசனும் வரவில்லையா?

சேடி:—பிரத்தியோதனன் என்று உச்சயினி அரசர் ஒருவர் இருக்கிறார். அவர் தம்புதல்வருக்காகத் தூது அனுப்பியிருக்கிறார்.

ஆவந்தி:—(தனக்குள்) நல்லதாயிற்று. இவள் இப்பொழுது எனக்கு உறவாகிவிட்டாள்.

தவமாது:—இவ்விவாகம் இவளுக்குத்தக்கதே. இரண்டு அரசர்குலங்களும் பெருமையாற் பெயர்பெற்றவைதான்.

பத்மா:—(கஞ்சுகியைநோக்கி) ஐயா! எனக்கருள்புரிய முனிவர்யாரேனும் இருக்கிறார்களா! அவர்களுக்கு யாதுவிருப்பமென்று அன்போடுவினவி அதைப் பெற்றுக்கொள்ளும்படி பிரார்த்தியும்.

கஞ்சுகி:—அம்மா! ஆணைப்படிசெய்கிறேன். (முனிவர்களைநோக்கி) இவ்வாச்சிரமத்திலிருக்கும் முனிவர்களே! கேட்டருளுங்கள்; மகதவரசன்புதல்வி பத்மாவதி இங்குவந்ததின்நிமித்தம் தங்கள்பால் அன்புடையவளாய்த் தவத்திற்குரிய சாதனங்களைத் தாங்கள் பெற்று அவளுக்குப் புண்ணியம் அளிக்கும்படி தங்களை வழிபடுகிறாள். யாருக்குக் கலசம்வேண்டும்? யாருக்கு வஸ்திரம்வேண்டும்? அத்தியயனவிரதத்தை நிறைவேற்றிக் குருதக்ஷிணைகொடுக்க யாருக்குப் பொருள்வேண்டும்? அறத்தில் ஆர்வமுடைய இவ் அரசகுமாரி தங்கள் திருவருளை நாடுகிறாள்; ஆதலால் விருப்பத்தைத் தெரிவித்தருள்வீராக.

துறவி:—(தனக்குள்) நல்லவேளை: எனக்கொருவழி கிடைத்தது; (வெளிப்பட) ஐயா! நான் ஓர் யாசகன்.

பத்மா:—ஸந்தோஷம். நான் இத் தவவனத்திற்கு வந்ததன்பயன் கைகூடிற்று.

தவமாது:—இவ்வாச்சிரமத்திலுள்ளவர் ஒன்றிலும் பற்றற்றவர். இவர் இங்குப் புதிதாக வந்தவராயிருத்தல்வேண்டும்.

கஞ்சுகி:—தங்களுக்கு யாதுவேண்டும்?

துறவி:—இவள் என் சகோதரி. கணவனைப் பிரிந்தவள். ராஜகுமாரி. இவளைச் சிலகாலம் காப்பாற்றவேண்டுகிறேன். இதுவன்றி, எனக்குப் பொருள் வஸ்திரம் முதலியவற்ருலாவதொன்று மில்லை. நான் ஜீவனத்தின்பொருட்டுத் துறவிவேஷம்பூண் டவனல்லன். மனத்திட்பமுடைய இவ் அரசகுமாரி அறநெறி யறிந்தவள், என் சகோதரியின்கற்பைக் காக்கவல்லவள்.

ஆவந்தி:—(தனக்குள்) ஆஹா! மந்திரி இவளை எனக்கு புகலிடமாக்க விரும்புகிருர். இருக்கட்டும், ஆராயாமல் ஒன்றும் செய்ய மாட்டார்.

கஞ்சுகி:—இவருடைய வேண்டுகோள் கடுமையாயருக்கிறதே! எவ்வாறு இணங்குவது? பொருள்கொடுக்கலாம், உயிர் தவம் முதலிய வற்றையும் கொடுத்துவிடலாம், ஆனல் அடைக்கலப்பொ ருளைக் காப்பாற்றுவது மிக அருமை.

பத்மா:— யாருக்கு என்னவேண்டுமென்று ஆடம்பரமாகக்கேட்டுப் பிறகு அதைப்பற்றி ஆலோசித்தல் உசிதமல்ல. அவர் சொல்லுகிறபடி அநுஷ்டிக்கவேண்டியதுதான்.

கஞ்சுகி:—இவ்வார்த்தை உனக்குத் தகுதியானதுதான்.

சேடி:—இங்ஙனம் மெய்யைக் காப்பாற்றுகிற இளவரசி நீடுவாழட்டும்.

தவமாது:-செல்வமே! சிரஞ்சீவியாயிரு.

கஞ்சுகி:—(பத்மாவதியைநோக்கி) அம்மா! அவ்விதமே செய்கிறேன். (யௌகந்தராயணனை அடுத்து) ஐயா! உமது சகோதரியைப் பரிபாலிக்க இளவரசி உடன்பட்டாள்.

துறவி:—இளவரசியின் அநுக்கிரகம். அம்மா! ராஜகுமாரியிடம் செல்.

ஆவந்தி:—(தனக்குள்) வேறென்னசெய்வேன். ஏழை போகிறேன்.

பத்மா:—வாவேண்டும், அம்மா! இப்பொழுது நீ நம்மவளாகிவிட்டாய்.

தவமாது:-இத்தகைய அழகினல் இவளும் ஓர் அரசகுமாரியென்றே நினைக்கிறேன்.

சேடி:—தாங்கள்சொல்வது சரிதான். இவள் சுகமாய்வாழ்ந்தவள் என்றே எனக்குத் தோன்றுகிறது.

துறவி:—(தனக்குள்) அப்பா! பாரத்திற் பாதி குறைந்தது. மந்திரிகள் ஊகித்தபடியே நமது காரியம் கைகூடிவருகிறது. இழந்த நாட்டை மீண்டும் நமது அரசர்பிரான் பெற்றவுடன் அவரிடம் வாஸவதத்தையை நான் ஒப்புவிக்கும்போது அவரது கற்பிற்கு இம்மகதவரசன் புதல்வி ஓர் சிறந்த சாக்ஷியாவாள். ஏனென்றால் அரசருக்குத் துன்பம்விளையுமென்று மொழிந்த ஸித்தர்கள், பத்மாவதி அவரதுதேவியாவாள் என்றுங் கூறினார்கள். அவர்கள்சொல்லை நம்பி நான் இவ்விதம் செய்கிறேன். ஸித்தர்சொற்கள் தவறில்லையென்று நன்குதெளியப் பட்டவை. ஊழ்வினை அவைகளை எதிர்த்துச்செல்ல மாட்டாது.

[ஓர் பிரமசாரிவருதல்.]

பிரமசாரி:—(வானைநோக்கி) உச்சிப்பொழுதாய்விட்டது. மிகவும் களைப்பாயிருக்கிறது. எவ்விடத்தில் இளைப்பாறலாம்? (நடந்து) இதோ காணப்படுவது தவவனமாயிருத்தல்வேண்டும். மான்கள் அவைகளுடைய சொந்த இருப்பிடத்திற்போலப் பயமின்றி யதேச்சையாய் உலாவுகின்றன. மலர்களும் கனிகளும் நிறைந்த கிளைகளோடுகூடிய மரங்கள் அன்போடு காக்கப்படுகின்றன. கபிலநிறமான பசுக்கூட்டம் ஏராளமாய் உலாவுகின்றன. சுற்றும் விளைநிலமொன்றும் காணப்படவில்லை. பலவிடத்தினின்றும் புகை எழும்புகிறது. ஆதலால் இது சந்தேகமின்றி ஓர் தவவனமே. இதோ ஓர் ஆச்சிரமம் இருக்கிறதே. நான் இதற்குள்ளே செல்கிறேன். (பிரவேசித்து) ஆ! இங்கே இருக்கிறவர்கள் ஆச்சிரமவாஸிகள் அல்லரோ. (மற்றோரிடம் நோக்கி) இதோ தவசிகளுமுளர். ஐயமின்றிச் செல்லலாம். ஆ! இவ்விடத்திற் பெண்கள் இருக்கிறார்களே!

கஞ்சுகி:—ஐயா! தடையின்றி உள்ளேசெல்லலாம். ஆச்சிரமம் என்பது யாவர்க்கும் பொதுவான இடமன்றோ!

ஆவந்தி:—ஹம்!

பத்மா:—ஆ! இம்மாது பிறபுருஷர்பார்வையை விலக்குகிறாள். சரி! நான் என் அடைக்கலத்தை ஜாக்கிரதையாய்க் காப்பாற்ற வேண்டும்.

கஞ்சுகி:—(பிரமசாரியை நோக்கி) ஐயா! நாங்கள் உமக்குமுன் வந்தவர்கள். ஆதலால் எங்கள் அதிதிபூஜையைப் பெற்றுக் கொள்ளும்.

பிரமசாரி:—(ஆசமனம் செய்து) போதும். இருக்கட்டும். களைப்புத் தீர்ந்துவிட்டது.

துறவி:—ஐயா! தாங்கள் எங்கிருந்துவருகிறீர்கள்? எங்கே செல்ல வேண்டும்? தங்கள் இருப்பிடம் யாது?

பிரம:—கேளுங்கள். ராஜகிருகம் என்ற நகரத்தினின்றும் வருகிறேன். வத்ஸநாட்டில் இலாவாணகம் என்றொருநகரம் உண்டன்றோ? அங்கே கல்விநிமித்தம் தங்கியிருந்தேன்.

ஆவந்தி:—(தனக்குள்) ஆ! கஷ்டம். இலாவாணகமா! இலாவாணகம் என்ற பெயரைக்கேட்டதும் என் துயரம் மீண்டும்முளைப்பது போலாயிற்றே!

துறவி:—கல்வி முடிந்துவிட்டதா?

பிரம:—இல்லையே!

துறவி:—முற்றுப்பெறுவதற்குமுன் இங்குவந்தகாரணம் என்ன?

பிரம:—அங்கே பயங்கரமானதோர்விபத்து நேர்ந்தது.

துறவி:—என்னவிபத்து?

பிரம:—அங்கே உதயனன் என்று ஒரு அரசர் இருக்கிறார்.

துறவி:—ஆமாம்: உதயனன் என்ற அரசரைப்பற்றிக் கேள்விப்பட்டதுண்டு. அவருக்கென்ன?

பிரம:—அவர் தமதுபத்தினி அவந்தியரசன்புதல்வி வாஸவதத்தையிடம் மிகுந்தகாதல் உடையவரல்லவா?

துறவி:—இருக்கலாம். அதற்குமேல்?

பிரம:—ஒருநாள் அவர் வேட்டையாடச்சென்றிருந்தபொழுது நகரம் தீப்பற்றியெரிந்தது. அதில் அவள் இறந்தாள்.

ஆவந்தி:—(தனக்குள்) இது நல்லபொய். நான் பாவி உயிர்வாழ்கிறேனே!

துறவி:—பிறகு என்னநடந்தது?

பிரம:—அவளைக் காப்பாற்றவிரும்பிய யௌகந்தராயணன் என்ற மந்திரியும் அத்தீயில் விழுந்துவிட்டார்.

துறவி:—உண்மையாய்விழுந்துவிட்டாரா? அதன்பிறகு?

பிரம:—வேட்டையாடி மீண்ட அரசர் அந்தச்செய்தியைக்கேட்டு அவ்விருவரதுபிரிவையும் ஆற்றாது துன்புற்று அத்தீயில் தம் உயிரையும் துறக்கச்சென்றார்; மற்றமந்திரிகளின் பெருமுயற்சியாற் றடுக்கப்பட்டார்.

ஆவந்தி:—(தனக்குள்) அறிவேன் அறிவேன்; என்நாயகாது அன்பின் திறத்தை.

துறவி:—பிற்பாடு?

பிரம:—அவள்சரீரத்தில்அணிந்திருந்த ஆபரணங்கள் பாதி கருகியுருகியிருந்தன. அவைகளைப்பார்த்து அரசர் மூர்ச்சையடைந்தார்.

எல்லோரும்:—ஆ! அப்படியா!

ஆவந்தி:—(தனக்குள்) இப்பொழுது யௌகந்தராயணாதுகருத்து நிறைவேறிற்று.

சேடி:—இளவரசி! தங்கள் தோழி அழுகின்றாளே!

பத்மா:—இளகியமனமுடையவளாயிருக்கலாம்.

துறவி:—ஆமாம். இயல்பாகவே இரக்கமுடையவள் என்சகோதரி. பிறகு?

பிரம:—பிறகு, அரசர் மெல்லமூர்ச்சைதெளிந்தார்.

பத்மா:—நல்லகாலம்; அவர் மூர்ச்சையுற்றார் என்று கேட்டதும் என் மனம் சூனியமாயிற்று.

துறவி:—பின்பு?

பிரம:—அவ்வரசர் உருண்டு புரண்டு உடம்பெல்லாம் செம்புழுதிபற்றியவராய்த் திடீரென்று எழுந்து ஆ வாஸவதத்தே! ஆ! அவந்திராஜபுத்ரீ! ஆ! என் அன்பே! ஆ! என் அன்பார்ந்த சிஷ்யே! என்றிப்படிப் பலவாறு புலம்பினார். அதிகமாய்ச்சொல்வானேன்—அன்றிற்பறவையும் இவ்வளவு துன்புற்றிருப்பதில்லை. சிறந்தமனைவியை இழந்தவர்களில் இவரைப்போல் ஒருவரையும்

கண்டதில்லை. தன் கணவனது இத்தகைய அன்பிற்குப் பாத்திரமான பெண்ணும் பாக்கியவதிதான். இறந்தவளாயினும் அவள் கணவனது அன்பால் உயிர்வாழ்கின்றவளே!

துறவி:—ஏன்! அரசரைத் தேற்ற மந்திரியொருவரும் இல்லையா?

பிரம:—உருமண்வான் என்றொருமந்திரியிருக்கிறார்; இவர் அரசரைத் தேற்றுவதில் மிக்கமுயற்சியுடையவர். அல்லும் பகலும் மிக முயன்று மன்னவனுக்குத் தொண்டுசெய்கிறார். அரசர் உண்ணுராயின் அவரும் உண்ணுர். எப்பொழுதும் கண்ணீர்சொரிந்து மெலிந்த முகத்தினராய் அரசரைப்போல உடம்பைப் பேணு திருக்கிறார். அரசர் உயிர்துறப்பாராயின் அவரும் உயிர்துறப்பது திண்ணம்.

ஆவந்தி:—(தனக்குள்) என் நல்விதியாற் காதலர் நல்லவிடத்தில் தங்கினர்.

துறவி:—(தனக்குள்) அந்தோ! உருமண்வான்சுமக்கிறது கனத்தபாரமன்றோ! எனதுபாரம் இலகுவாயிற்று. ஏனெனின் எங்கே அரசர்இருக்கிறாரோ, அங்கேதான் காரியம்யாவுமிருக்கின்றன. (வெளிப்பட) ஏனையா! அவ்வேந்தர் ஆறுதல்உற்றாரா?

பிரம:—எனக்கு அது தெரியாது. "இங்கே அவளுடன் சிரித்தேன். இங்கே அவளுடன்பேசினேன். இங்கே அவளுடன் இருந்தேன், இங்கே அவளுடன் சினந்தேன். இங்கே அவளுடன் துயின்றேன்" என்றிவ்வாறு அரற்றும் அரசரை மந்திரிகள் மிக முயன்று நகரத்தினின்றும் வெளியே அழைத்துச்சென்றனர். அரசர் சென்றதும் நக்ஷத்திரம்இல்லா வானம்போன்றும் சந்திரனில்லா இரவுபோன்றும் ஒளியிழந்தது அவ்வூர். பிறகு நானும் வெளிவந்துவிட்டேன்.

தவமாது:—அவ்வரசர் சிறந்தகுணமுடையாதல்வேண்டும். அவரை ஒரு வழிப்போக்கன்கூட இவ்விதம் புகழ்கிறான்.

சேடி:—இளவரசி! வேறொருபெண் அவரை யடைதல் கூடுமோ?

பத்மா:—(தனக்குள்) என்கருத்தோடு இசைந்துமொழிந்தாள்.

பிரம:—உங்களிடம் விடைபெற்றுக்கொள்கிறேன்.

கஞ்சுகி:—போய்வாரும் உமது காரியம் கைகூடட்டும்.

பிரம:—அப்படியே. (போதல்)

துறவி:—சரி! நானும் ராஜகுமாரியிடம் விடைபெற்றுப் போகவிரும்புகிறேன்.

கஞ்சுகி:—(பத்மாவதியைநோக்கி) அம்மா! இவர் உம்மிடம் விடைபெற விரும்புகிறார்.

பத்மா:—ஐயா! உமது சோதரி பிரிவாற்றுமற் கிலேசப்படுவாளே!

துறவி:—சாதுக்களைச் சார்ந்த இவள் ஒருகாலும் துன்புறுள்.

கஞ்சுகி:—போய்வாரும். பின்னுற் பார்த்துக்கொள்வோம்.

துறவி:—அப்படியே. (போதல்)

கஞ்சுகி:—நமக்கும் இவ்வாச்சிரமத்திற்குள் செல்லநேரமாயிற்று.

பத்மா:—ஆர்யே! நமஸ்கரிக்கிறேன்.

தவமாது:—குழந்தாய்! தகுதியுள்ளகணவனை அடைவாய்.

ஆவந்தி:—ஆர்யே! நானும் நமஸ்கரிக்கிறேன்.

தவமாது:—நீயும் விரைவில் உன்பர்த்தாவை அடைவாய்.

கஞ்சுகி:—நாமும்செல்வோம். இப்பொழுது பறவையெல்லாம் தத்தம் கூட்டிற்குச் செல்லுகின்றன. முனிவர்கள் நீராடுகிறார்கள். ஓமத்தீ யெறிந்து தவவனமெல்லாம் புகை பரவுகிறது. வான நடுவில் தூரத்தினின்றும் விழுகிற சூரியனும் கிரணங்களை மீட்டடக்கித் தேரை அஸ்தமனகிரியைநோக்கி மெல்லத் திருப்பிச்செல்கிறான். (எல்லோரும்போதல்)

[முதல் அங்கம் முற்றிற்று.]

(தொடரும்.)

ஜி. ஹரிஹரசாஸ்த்ரி.

திருவநந்தபுரம்.